ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

மே - ஜீன் 2026

ஆண்டு 6 ▲ இதழ் 6

விலை 250/-

யாகாவாராயினும் நா காக்க

ஈரச்சிறகுகள்



## வெண்ணிலா எஸ்.ஏ.கப்பார்

நேர்காணல்

# முத்தமிழ் கலசம்

ஆண்டு 6 ▲ இதழ் 6

மே - ஜூன் 2026

இருமாதத்திற்கொருமுறை

**பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா**

Chief Editor & publisher : Sithy Wafeera

**சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. Editor : Tamilnenjam Amine

**ஆசிரியர் குழு :**

Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ,
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்,
மின்னத் ஸரா பரூஸ்

**வடிவமைப்பு:**

Omardeen Aysha Shakeela


படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.


படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
email :

muththamizh.kalasam@gmail.com

The Editor of "Muththamizh kalasam",
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka


## இளவேனில் காலம்

புத்தம் புது அரும்புகள்
புத்துணர்வுடன் பூப்பெய்தின
பூரிப்புடன் பூங்காக்கள்

## முதுவேனில் காலம்

நிலம் வறண்டு
நீர் அகன்று
நிர்க்கதியான தாவரங்கள்

## கார்காலம்

காடுகளுக்கு குதூகலம்
கங்கைகளுக்கு கண்ணீர்
குழந்தைகளுக்கு கொண்டாட்டம்

## குளிர்காலம்

எனக்குப் போர்வையாய் நீ
உனக்குப் போர்வையாய் நான்
உடல்களின் சங்கமம்

**ரிஃப்கா அன்ஸார்**

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த வாசகர்கள் அனைவருக்கும் வணக்கம்! ( அஸ்ஸலாமு அலைக்கும்)

மீண்டும் ஒரு புதிய இதழில் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி! இவ்விதழுடன் எமது வெற்றிகரமான ஆறாவது ஆண்டுப் பயணம் பூர்த்தியாகிறது என்பதில் கூடுதல் மகிழ்ச்சி!

காய்த்த மரம் கல்லெறிபடுவது போல், எம் வளர்ச்சி கண்டு பொறுக்கவியலா சிலரின் சொல்லெறிகளையும் காணமுடிகிறது. ஒரு சிலரின் ஆக்கங்கள் தொடர்ந்து வருவதையிட்டு சிலர் தமது ஆதங்கத்தையும் வெளிப்படுத்துகிறார்கள். பணம் கொடுத்து சந்தாதாரராகும் தோழமைகள் மனதில், ஒவ்வொரு இதழிலும் தமது ஆக்கங்கள் வரவேண்டுமென்ற சிறு எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்யும். வாரப்பத்திரிகைக்கு படைப்புகளை அனுப்பி, ஒவ்வொரு வாரமும் தம் ஆக்கம் பிரசுரமாகக் காத்திருப்போரும் இருக்கையில், இருமாதங்களுக்கு ஒருமுறை வெளிவரும் எமது இதழில், தமது படைப்புகள் வரவேண்டுமென வாசகர்கள் ஆசைப்படுவது இயல்பு. தரமாக இருக்கும் பட்சத்தில், அவற்றை நாம் சேர்த்துக் கொள்வது எம் பொறுப்பு. அதேபோல ஆர்வமாக அணிசேரும் புதியவர்களுக்கும் நாம் களம் கொடுக்கத் தவறுவதில்லை. ஆகவே, உங்கள் நண்பர்களுக்கும் எமது இதழை அறிமுகப் படுத்தி அவர்களின் ஆக்கங்களும் எம் இதழை அலங்கரிக்கச் செய்யுங்கள்! எல்லோரும் சேர்ந்தே பயணிப்போம்.

யுத்த நிகழ்வுகளால் வாழ்க்கைச் செலவு தாறுமாறாக உயர்ந்து வரும் இக்காலகட்டத்தில், வீட்டிலிருந்தபடியே உபரியாக வருமானத்தை தேடிக்கொள்ள சில ஆலோசனைகளை இனிவரும் இதழ்களில் பகிரவுள்ளோம். நீங்களும் உங்கள் ஆலோசனைகளை எமக்கு தெரிவிக்கலாம்.

தொடர்ந்து எழுதுங்கள்! உங்கள் எழுத்துகளின் வலிமை எமக்கும் வலு சேர்க்கட்டும்! எம்முடன் அணிசேரும் அனைவருக்கும்

நன்றிகளும் நல்வாழ்த்துகளும் உரித்தாகட்டும்!

உழைக்கும் கரங்கள் உயரட்டும்!

அனைவருக்கும் உழைப்பாளர் தின வாழ்த்துகளோடு சர்வதேச அன்னையர் தினத்தை இம்மாதம் கொண்டாடவிருக்கும் அன்னையருக்கும் அன்பு வாழ்த்துகள்!

என்றும் அன்புடன்
எஸ். வ. பிரா
(பிரதம ஆசிரியர்)

# ஈரச்சிறகுகள்

தனித்து நிறுத்திடாத சமன்மை உரிமைக்காய்
அலங்காரம் விடுத்த உண்மை அங்கீகாரத்திற்காய்
வரையறை எல்லைக்குள் முடங்கிடாத வாழ்வியலுக்காய்
நிறுத்தலில்லாத தேடலைத் தொடருகிறது அப்பறவை

வஞ்சகமும் சூதும் சூரிய நாக்குகளாய்
வாட்டி வதைத்திடுவதை உணர்ந்தும் உணராது
சுயமுணரா உயிர் உற்பத்திக் கிடங்காய்
அஞ்சியஞ்சித் தன்னைத் தொலைக்கத் தொடங்கியது

அதோ... வனப்பெருவெளியில் வீசிய காற்று
விடுதலை வேட்கையுடன் நாசி நுழைய
தியாகத் தீயின் வாசம் உணர்ந்து

சிறகடிக்கும் அக்னிச் சிறகுகளில் இருந்து
உதிரும் சிறுதீயும் பெரு நெருப்பாக
உதிரத்தில் ஊறிய சுயம் கொப்பளித்துத்
தனக்கானத் தேடலைத் தொடங்கியது

இதோ... போதிமரத்தின் உச்சியில் அமர்ந்து
ஞானம் கொண்டு ஞாலம் வென்றதை
உணராது இன்னும் தேடலைத் தொடர்ந்து
உற்று நோக்கியே உன்னதமாய் ஏனோ

ஈரச்சிறகுகளைத் தன் அலகால் கோதி
சிடுக்கெடுத்துக் கொண்ட அந்தப் பறவை
சிறகுகளிடம் கோரிக்கை வைக்கிறது
எப்போதும் அணையாத சிறுகங்குகளை
உடனிருத்திக் கொள்ளுங்கள்!



**அன்புச்செல்வி சுப்புராஜு**
பட்டாபிராம் சென்னை

# மாற்றம் எப்போது தோன்றும்..?

டிஜிட்டல் வெளியெங்கும்
சிதறிக் கிடக்கின்றன
சர்வாதிகாரத்தின்
உமிழ்நீர்த் துளிகள்

இங்கே..
அரசியலென்பது
பெண்ணுடல்களால் தைக்கப்பட்ட
கந்தலாடை

Views மேலெழுகையில்
வசைச் சொற்கள்
தேனாய் இனிக்கின்றன

'சிட்னியின் படிக்கட்டுகளோ..'
'சிம்மாசனத்தின் கால்களோ..'
இடமாறினாலும்..
ஆணாதிக்கத்தின்
கீழ்நோக்கிய பார்வை
திசை மாறுவதேயில்லை

காலமென்ன
விசித்திரக்கண்ணாடியா..
பெண்ணின் வெற்றியை மட்டும்
இவர்களுக்கு
ஒரேவிதமாய் காட்சிப்படுத்த

அந்தரங்கம் இங்கொரு
திறந்த சந்தை,
கூச்சலிடுபவன் கைக்கல்லவா
எப்போதும்
கிடைத்து விடுகிறது தராசு..

தார்மீகமற்றவனிடம்
தருணங்களுக்கேற்ற
ஒப்பனைகள் மட்டுமே உண்டு

நேற்று ஒருத்தியின்
காயத்தை ரசித்த மௌனம்..
இன்று இன்னொருத்திக்காக
'முதலைக் கண்ணீர்' வடிக்கிறது

வலமோ..இடமோ..மையமோ
திசையெங்கிலும்
கைகளில் படிந்திருக்கிறது
ஒரே நிறச்சேறு

சுவாரஸ்யங்களையே
சதா தேடும் நுகர்வுப் பசிக்கு
யாரிங்கு
முதற் பலியாடு..

கொள்கைகள் விவாதிக்கப்படாத
களங்களில்
கிசுகிசுக்களே
புனித நூல்களாகின்றனவா
அன்றைய பத்திரிகைகளின்
'மஞ்சள் கறை' முதல்
இன்றைய
'வைரல்' வீடியோக்கள் வரை
அதிகாரத்தின் ருசியென்பது
பெண்ணை 'பெயரற்ற உடலாக'
மாற்றவே ஆர்வப்படும்
பேரவலம்
இங்கு..
ஆகப்பெரிய துயரம்
யாதெனில்..
யாரும் யாரையும்
தண்டிக்க முடியாது,
ஏனெனில்,
எல்லோருடைய கெமராக்களும்
எவரோ ஒருவரின்
அந்தரங்கத்தைத்தான்
பசியோடு
மேய்ந்து கொண்டிருக்கின்றன

**எஸ். பாயிஸா அலி**

# தைராய்டு சுரப்பி பிரச்சினைகளும் நிவாரணமும்




Dr ஜலீலா முஸம்மில் MBBS SL
சிரேஷ்ட வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை
ஏறாவூர் .

கடந்த இதழின் தொடர்ச்சி

## இலங்கையில் தைராய்டு நோய்கள் மற்றும் சிகிச்சை

1. இலங்கையில் தைராய்டு நோய்களின் நிலை Hypothyroidism (தைராய்டு குறைவு – சுரப்பி குறைவாக செயல்படுதல்) Hyperthyroidism (தைராய்டு அதிக செயற்பாடு) தன்னைத் தானே தாக்கும் தைராய்டு நோய்கள் (Hashimoto's, Graves') தைராய்டு கட்டிகள் மற்றும் புற்றுநோய் இவற்றுக்கான உள்ளூர் மருத்துவ வழிகாட்டிகள் Endocrine Society of Sri Lanka மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

2. தேசிய / உள்ளூர் வழிகாட்டிகள் Endocrine Society of Sri Lanka வின் அறிவித்தல்களின்படி தைராய்டு நோய்களின் வகை பின்வரும். ஆய்வுகூட பரிசோதனைகள் மூலம் கண்டறியப்படுகின்றன. (TSH, Free T4, Free T3, Antibodies) போன்ற பரிசோதனைகளின் மூலம் Hypothyroidism மற்றும் Hyperthyroidism தைராய்டு கட்டிகள் மற்றும் புற்றுநோய் பராமரிப்பு மற்றும் தொடர்ந்த கண்காணிப்பு முறைகள் செயல்படுத்தப்படுகின்றன.



3. பிறவியிலேயே தைராய்டு குறைபாடு (Congenital Hypothyroidism) இலங்கையில் குழந்தைகளுக்கான தைராய்டு பிரச்சினைகளை கண்டறிவதற்கான வழி முறையாக பிறந்த குழந்தைகளுக்கு TSH மற்றும் Free


T4 பரிசோதனை செய்யப்படுகிறது. குழந்தைகளின் பாதத்தில் இரத்தத்தை குத்தி எடுத்து இது பரிசோதிக்கப்படுகிறது.
உடனடி Levothyroxine மருந்து தொடங்குதல் வளர்ச்சி மற்றும் மூளை வளர்ச்சி கண்காணிப்பு
ஒவ்வொரு 6–8 வாரங்களிலும் இரத்தப் பரிசோதனை என்பனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

4. கர்ப்ப கால தைராய்டு நோய்களை கண்டறிதல்.

Sri Lanka College of Obstetricians and Gynaecologists கர்ப்பிணிகளுக்கான தனி வழிகாட்டி வழங்கியுள்ளது. கர்ப்ப காலத்தில் TSH சாதாரண அளவுகள் மாறுபடும் வாய்ப்புகள் இருந்தால் அதாவது தைராய்டு சுரப்பு குறைவு Hypothyroidism இருந்தால் லெவோ தைரோக்சின் மருந்து Levothyroxine அளவு திருத்தம் 4–6 வாரங்களுக்கு ஒருமுறை கண்காணிக்கப்பட்டு வழங்கப்படும்

5. இலங்கையில் நோயறிதல் முறைகள்

முக்கிய பரிசோதனைகள்:
TSH – முதன்மை சோதனை
Free T4 / Free T3 Anti-TPO antibodies (Autoimmune- தன்னைத் தாக்கும் நோய்கள் சந்தேகமெனில்)
Ultrasound (கட்டிகள் இருந்தால்)
Fine Needle Biopsy (புற்றுநோய்




சந்தேகமெனில்)


6. இலங்கையில் சிகிச்சை வழிமுறைகள்

Hypothyroidism குறைவான தைராய்டு சுரப்புக்கு Levothyroxine தினசரி மருந்து 4–6 வாரங்களுக்கு பிறகு TSH சோதனை நிலைமை ஸ்திரமானபின் வருடத்திற்கு ஒருமுறை பரிசோதனை

Hyperthyroidism தைராய்டு கூடுதல் சுரப்பு Anti-thyroid மருந்துகள் (Carbimazole / Propylthiouracil) Radioactive Iodine (தேர்ந்தெடுக்கப்பட்ட நோயாளிகள்) அறுவை சிகிச்சை (தேவையானால்)

தைராய்டு கட்டிகள் & புற்றுநோய்

Ultrasound மதிப்பீடு கட்டிய




ஸ்கேன் செய்தல் Fine needle biopsy ஊசியால் குத்தி இழையத்தை பரிசோதித்தல் அறுவை சிகிச்சை சில நேரங்களில் Radioactive iodine சிகிச்சை


7. அயோடைன் (Iodine) பற்றிய தகவல் இலங்கையில் Universal Salt Iodization நடைமுறையில் உள்ளது. இதனால் அயோடைன் குறைபாடு தொடர்பான தைராய்டு நோய்கள் குறைக்கப்பட்டுள்ளன. இலங்கையில் தைராய்டு நோய்களுக்கு தெளிவான மருத்துவ வழிகாட்டிகள் உள்ளன. நோயின் தன்மை, வயது, கர்ப்ப நிலை, மற்றும் ஆய்வுப் பெறுபேறுகள் அடிப்படையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.


## உணவு முறைகள்

தைராய்டை சரி செய்யும் சத்து அயோடின் மற்றும் செலினியம் சத்துதான். இது அதிகமுள்ள உணவுகளை அன்றாடம் எடுத்துக்கொள்ள தைராய்டு பிரச்சினைகளை தவிர்க்கலாம். அந்த வகையில் தைராய்டு கோளாறு ஏற்படுவதை தவிர்க்க உதவும் உணவு வகைகள் எவை என்பதை பார்க்கலாம்.

தைராய்டை தவிர்க்க சீரான அயோடின் கொண்ட உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, பச்சைக் காய்கறிகளில் அயோடின் சத்து கூடுதலாக இருப்பதால், அவற்றைத் தொடர்ந்து எடுத்துக்கொள்ளலாம்.

தைராய்டு பிரச்சினைகளை குறைக்க உதவுபவை வெள்ளரிக்காய் ஜூஸ், தைராய்டு சுரப்பியின்






செயல்பாட்டை அதிகரிக்கும் செலரி ஜூஸ், மஞ்சள் மற்றும் மிளகு கலந்த ஜூஸ், தைராய்டு சுரப்பு அதிகரிக்கும் எலுமிச்சை ஜூஸ்.

ஹார்மோன் சீராக சுரக்கவும, தைராய்டு இயக்கத்தை சீராக்கவும் செய்யும் ஆற்றல் உடையது தேங்காய், தேங்காய் எண்ணெய். தேங்காய் பூ தைராய்டு பிரச்சினை உள்ளவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம் என்று கூட சொல்லலாம். தினமும் காலையில் தேங்காய் பூ சாப்பிட்டுவந்தால், தைராய்டு சுரப்பு குறைபாட்டை முற்றிலும் குணமாக்கும். உடலுக்கு தேவையான மினரல்ஸ் தேங்காய் பூவில் உள்ளதால் ஜீரண சக்தியை மேம்படுத்தும்.

பெர்ரி பழங்களான ப்ளுபெர்ரி, ஸ்ட்ராபெர்ரிகள், ராஸ்பெர்ரி போன்றவை சிறந்த ஆன்டி ஆக்ஸிடன்ட்களாக இருக்கின்றன. பயோமெடிசின் மற்றும் பார்மகோதெரபி சார்பில் வெளியிடப்பட்ட ஆய்வில், ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் தைராய்டு செயலிழப்பை நிர்வகிக்கவும், நோய் எதிர்ப்பு மண்டலத்தை ஆதரிக்கவும் உதவும் என கூறப்பட்டுள்ளது.

ஆப்பிள்களில் நார்ச்சத்து மற்றும் குவெர்செடின் போன்ற முக்கியமான ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளன. இது வீக்கத்தைக் குறைக்கவும் தைராய்டு செயல்பாட்டை ஆதரிக்கவும் உதவுகிறது. மேலும், ஆப்பிள்கள் உங்கள் உடலின் நச்சுத்தன்மையை நீக்கி, தைராய்டு செயல்பாட்டை மேம்படுத்த உதவுகிறது.

தைராய்டு ஹார்மோன்களை சீராக்க உதவும் வைட்டமின் டி இயற்கையாகவே உள்ள சில உணவு வகைகளில் முட்டையும் ஒன்றாக உள்ளது. முட்டையில் ஐயோடின் மற்றும் செலினியம் நிறைந்துள்ளன. இவை இரண்டும் தைராய்டு ஹார்மோன் உற்பத்தி மற்றும் சமநிலைக்கு அவசியமானதாக இருக்கிறது.

தயிர் அயோடின் பெறுவதற்கான சிறந்த மூலமாக உள்ளது. இது தைராய்டு செயல்பாட்டுக்கு மிகவும் அவசியம். இதில் நிறைந்திருக்கும்

புரோபயாடிக்குகள் குடல் ஆரோக்கியத்துக்கு நன்மை தருகிறது.

பூசணி விதைகள் தைராய்டு சீராக செயல்பட உதவுகிறது. இதில் மெக்னீசியம், துத்தநாகம் மற்றும் ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் நிறைந்துள்ளது. இவை தைராய்டு ஹார்மோன் தொகுப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. பூசணி விதைகளை வழக்கமாக உட்கொள்வது சீரான தைராய்டு செயல்பாட்டை ஊக்குவிக்கும்.

வாழைப்பழம் தைராய்டு பிரச்சினையின் அறிகுறிகளான நரம்பு பழுதடைதலை சரி செய்கிறது. மேலும், நரம்பு பிரச்சினைகளை முற்றிலும் நீக்கி விடுகிறது. ஹைபோ தைராய்டிசம் பிரச்சினைக்கு வாழைப்பழம் சிறந்த தீர்வு தரும். எனவே வாழைப்பழத்தை எந்த பயமும் இல்லாமல் சாப்பிடலாம்.

தானியங்களில் ஓட்ஸ், பார்லி மற்றும் ப்ரௌன் அரிசி போன்றவற்றில் வைட்டமின் பி உள்ளிட்ட ஊட்டச்சத்துக்கள் உள்ளன. இந்த சத்துக்களை அதிகம் சேர்த்தால், அவை உடலில் உள்ள மெட்டபாலிசத்தை அதிகரிக்கும். இதனால் தைராய்டு சுரப்பி சீராக இயங்கி, உடலுக்குத் தேவையான தைராய்டு ஹார்மோனை சுரக்க உதவும்.

தைராய்டு பிரச்சினை உள்ளவர்கள் தவிர்க்க வேண்டிய உணவுகள் ‘காய்ட்ரோஜன்’ எனும் வேதிப்பொருள் நிறைந்த அவரை இனமான சோயா, முளை கட்டிய பயறுவகைகள், முட்டைக்கோஸ், காலிஃப்ளவர் இவற்றை முடிந்தளவு தவிர்க்க வேண்டும்.



# கவிஞர் எஸ். ஏ. கப்பார்

## நேர்காணல்



**நேர்கண்டவர் – வஃபீரா வஃபி**

எமது நேர்காணலில், இலக்கியவாதியாக, வெண்ணிலா காலாண்டு சஞ்சிகையின் ஆசிரியராக, ஒரு நூலாசிரியராக பன்முகத் திறமைகளுடன் திகழும் ஆளுமை எஸ் ஏ.ஏ.கஃப்பார் அவர்களைச் சந்திக்கிறோம்.

**1. உங்களைப் பற்றிய அறிமுகத்துடன் ஆரம்பிப்போம்.**

1977ஆம் ஆண்டு முதல் கதை, கவிதை கட்டுரைகள் என இலக்கியப் படைப்புகளை வெளிக்கொணரும் ஒரு சாதாரண படைப்பாளி. வெண்ணிலா காலாண்டிதழின் ஆசிரியர். வெண்ணிலா மருதமுனையிலிருந்து தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருக்கும் ஒரு பல்சுவை இலக்கிய மஞ்சரி.

1981ஆம் ஆண்டு இலங்கை வங்கியில் ஓர் இலிகிதராகக் கடமையேற்று சுமார் 34 வருடங்கள் சேவையாற்றி பல பதவியுயர்வுகள் பெற்று, இறுதியாக முகாமையாளராகக் கடமையாற்றி 2015இல் ஓய்வுபெற்றேன்.

நமது நாட்டுக்கு கணினி அறிமுகப் படுத்தப்பட்ட ஆரம்ப காலத்திலேயே கணினி மென்பொருள், கணினி வன்பொருள் கல்வியை முறையாகக் கற்று உயர் டிப்ளோமா பட்டங்கள் பெற்றவன். அதைத் தொடர்ந்து 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வங்கி தலைமைக் காரியாலயத்தில் கணினிப் பிரிவிலும் கடமையாற்றியுள்ளேன். 2005ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வுபெறும்வரை இலங்கை வங்கி கிழக்கு மாகாண கணினி தொழிநுட்ப ஆதரவு அதிகாரியாகக் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது. 2000 ஆண்டுக் காலப்பகுதியில் என்னால் எட்டு கணினி சம்பந்தமான நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிடப்பட்டுள்ளன.




கலைஞர் சுவதம் விருது 2021 கல்முனைப் பிரதேச செயலகம்.

**2. இலக்கிய ஆர்வலராக பல நிகழ்வுகளில் உங்கள் பங்களிப்பு இருப்பதைக் காணமுடிகிறது. உங்கள் இலக்கிய ஈடுபாட்டுக்கு ஆரம்ப வித்திட்டது யார்/ எது?**

அழைப்பு விடுக்கும் பட்சத்தில் இலக்கிய நிகழ்வுகளிற் பங்குபற்றிப் படைப்பாளிகளைக் கௌரவப் படுத்துவதும், நிகழ்வுகளில் இடம்பெறும் விமர்சன உரைகளை உன்னிப்பாகக் கவனத்திற் கொள்வதும் எனது வழக்கம். இந்த ஆர்வம் ஏற்படக் காரணம் காலஞ்சென்ற எனது தந்தைதான். அவர் ஓர் அரச பாடசாலை அதிபராயிருந்தவர். இலங்கையின் பல பாகங்களிலும் கல்வி கற்பித்தவர். இலக்கியத்தில் நேரடியாக ஈடுபாடு கொண்டிராவிட்டாலும் இலக்கியத்தை நேசித்தவர். நூல்களை வெளியீடு செய்யும் படைப்பாளிகளிடமிருந்து அழைப்புக் கிடைத்தால் நிகழ்வுக்குச் சென்று நூல்களைப் பணம் கொடுத்துப் பெற்றுப் படிக்கும் பழக்கம் கொண்டிருந்தவர். இந்தப் பழக்கம் என்னையும் தொற்றிக்கொண்டதில் வியப்பொன்று மில்லை. இதனால் எங்களது தாய்வீடு புத்தகங்களால் நிரம்பி வழிந்தது. மேலதிகமாக இந்திய வார, மாத தமிழ் இதழ்களும் ஆக்கிரமித்துக்கொண்டன. அந்தச் சூழல் என்னையும் ஒரு சாதாரண எழுத்தாளனாக உருவாக்கியது.

**3. ஓர் இதழாளராக இலங்கையில் வெளிவரும் சஞ்சிகைகள், சிற்றிதழ்கள் பற்றிய உங்கள் கண்ணோட்டம் என்ன?**

இன்று எமது நாட்டில் விரல்விட்டு எண்ணக்கூடிய சஞ்சிகைகள் அல்லது சிற்றிதழ்கள்தான் வெளிவருகின்றன. அதிலும் மாத இதழ்களாக ஞானம், ஜீவநதி என்பனவும் இரு மாத இதழாக உங்களது முத்தமிழ் கலசம், காலாண்டிதழ்களாக அவரி, கீறல், கலைமுகம், வெண்ணிலா என்பனவும் தொடர்ச்சியாக வெளிவருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. ஏனையவை காலந்தப்பி இடைக்கிடை வெளிவருகின்றன. அதுவும் மகிழ்ச்சிதான்.

ஞானம், ஜீவநதி என்பன ஒருபடி மேலே சென்று நிறைய நூல்களை வெளியீடு செய்கின்றன. கடந்த வாசிப்பு மாதத்தில் மட்டும் முப்பத்தொரு

நாட்களும் மொத்தம் முப்பத்தொரு நூல்களை வெளியிட்டு இமாலய சாதனை புரிந்துள்ளது ஜீவநதி பதிப்பகம் என்பது நாமறிந்ததே.

சிற்றிலக்கியத் துறையில் வாழ்நாள் சாதனை புரிந்தது மறைந்த டொமினிக் ஜீவாவின் மல்லிகைதான். 400இற்கும் மேற்பட்ட இதழ்களை வெளியிட்டு அரை நூற்றாண்டுச் சாதனை நிகழ்த்தவிருந்த வேளை, மல்லிகை ஜீவாவின் மரணம் அதனை நிறுத்திவிட்டது கவலைக்குரியது.

**4. இலங்கையைப் பொறுத்தவரை இலக்கியத்துறையின் வளர்ச்சி எப்படி அமைந்துள்ளது? இத்துறையை எப்படி மேம்படுத்தலாம்?**

இலங்கையைப் பொறுத்தவரை இலக்கியத்துறை ஓரளவு வளர்ச்சி கண்டுவருவது மகிழ்ச்சிக்குரியது. நிறைய புதிய எழுத்தாளர்கள் பல்கலைக்கழக மட்டத்திலிருந்து உருவாகியுள்ளனர்.

**வெண்ணிலாவுக்குச் சிறந்த சஞ்சிகைக்கான விருது 2024 - கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.**



அவர்கள் கவிதை சிறுகதை நாவல் மரபுகளை உடைத்தெறிந்து இலக்கியம் படைக்க முனைகிறார்கள். பின் நவீனத்துவம் அவர்களது படைப்புகளில் முதன்மை பெறுகிறது. அவர்களது குற்றச் சாட்டுகளெல்லாம் மூத்த இலக்கியவாதிகளிற் பலர் அவர்களைக் கண்டுகொள்வதில்லை என்பதும் அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி ஊக்கப்படுத்து வதுமில்லை என்பதும்தான். குறிப்பாக இன்றைய தலைமுறையினரின் பெரும்பாலான கவிதைகளை மூத்த கவிஞர்களிற் சிலர் கவிதைகளாக ஏற்றுக்கொள்ள மறுத்து அவை வெறும் வார்த்தைக் குப்பைகள் எனவும், இடைவெளிகளை நீக்கிவிட்டால் மூன்று நான்கு வரிகள் கொண்ட ஒரு பந்தி எனவும் புறந்தள்ளி விடுகின்றனர்.

இந்நிலை மாறி புதிய தலைமுறை எழுத்தாளர்களின் நல்ல ஆக்கங்கள் வரவேற்கப்படல் வேண்டும். தேசிய பத்திரிகைகளும் ஏனைய சஞ்சிகைகளும் கூடுதலான இடமளிக்கவேண்டும். அவர்கள் வெளியிடும் நூல்களைப் பணம் கொடுத்து வாங்கி ஊக்கப்படுத்த வேண்டும்.

**5. உங்கள் இலக்கிய பங்களிப்புகள் முன்னெடுப்புகள் பற்றி சொல்லுங்கள்!**

1977 ஜூன் - ஜூலை 'ஸாஹிறா' இலக்கிய இதழில் 'அவன் என்ன செய்துவிட்டான்' என்ற தலைப்பில் எனது முதலாவது சிறுகதை பிரசுரமானது. இதுவே எனது முதலாவது இலக்கியப் படைப்பாகும். அப்போது எனக்கு வயது 18. தொடர்ந்து 1977 அக்டோபர் 'உள்ளம்' இலக்கிய இதழில் 'உயரத்திலிருப்பவன்' உருவகக் கதையும் பிரசுரமானது. தொடர்ந்து தேசிய நாளேடுகளிலும்,

சஞ்சிகைகளிலும் அவ்வப்போது கவிதைகளும் சிறுகதைகளும் பிரசுரமாகின.

எனது முதலாவது கவிதைத் தொகுதி ‘நிலவு அவள்’ ஏப்ரல் 2019 இலும் முதலாவது சிறுகதைத் தொகுதி ‘அப்பாவின் டயரி’ ஜூலை 2024 இலும் வெளிவந்தன. அத்துடன் வாசிப்பை மேம்படுத்தி புதிய படைப்பாளிகளுக்குக் களம் அமைத்துக்கொடுக்கும் நோக்கில் இலாப நோக்கம் கருதாது கடந்த ஐந்து ஆண்டுகளாக வெண்ணிலா சஞ்சிகையை வெளியிட்டுவருகிறேன்.

**6. நவீன தொழிநுட்பத்தில் செயற்கை நுண்ணறிவின் (AI) ஆதிக்கம் வளரும் சந்ததிக்கு நன்மை பயக்கக்கூடியதா அல்லது பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதா?**

மொத்தத்தில் நன்மை பயக்கக் கூடியதே. செயற்கை நுண்ணறிவுத் தொழிநுட்பமென்பது கணினிகளும் மனிதர்களைப் போல் சுயமாகச் சிந்திக்கவும், கற்றுக்கொள்ளவும் முடிவெடுக்கவுமான முறைமைகளை உருவாக்கும் ஒரு துறை. நன்மை பயக்கவேண்டும் என்ற நோக்கத்தில் உருவானதுதான் செயற்கை நுண்ணறிவுத் துறை. ஆரம்ப காலத்தில் நிறுவனங்கள் இதனைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வரை அதன் பாதிப்புகள் பெரிதாகத் தெரியவில்லை. தினசரி வாழ்க்கையில் கூகுளின் குரல் மூலம் பேசும் வசதி, சாலைப் போக்குவரத்து வழிகாட்டி, முகத்தை அடையாளம் காணுதல், ஒருவருக்குப் பிடித்த வீடியோக்களைப் பரிந்துரை செய்தல் போன்ற செயற்கை நுண்ணறிவுத் தொழிநுட்பம் இன்றுவரை நன்மை பயப்பனவாகத்தானே உள்ளன. ஆனால் இத்துறை சாதாரண மக்களிடையேயும் பரவலாகப் பகிரப்பட்டபோது அதன் நன்மைகளைவிடப் பாதிப்புகள் பற்றிய கவலை மேலோங்கிக் காணப்படுகிறது. உதாரணமாக நாடுகளுக்கிடையேயான யுத்தங்களின்போது துல்லியமாக நபர்களையும், இடங்களையும் இனங்கண்டு அழிப்பதற்குப் பயன்படுத்தப்படுவது அவரவர் தரப்பில் நன்மையாகத்தான் கருதப்படுகிறது. ஆனால் சாதாரண குடிமக்களும் இலக்குவைக்கப்படுவது கவலைக்குரியது. இருப்பினும் இன்றைய வளரும் சந்ததி இதனை தங்களது கல்வி வளர்ச்சிக்காகவும் புதிய புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளவும் பயன்படுத்த வேண்டுமேயன்றி முறைகேடாகவும் மற்றவர்களை வஞ்சிக்கும் வகையில் அல்லது மானபங்கப்படுத்தும் வகையில் பயன்படுத்துதல் கூடாது. அவ்வாறு நிகழும் பட்சத்தில் கடுமையான சட்டத்தின் மூலம் அவை தடைசெய்யப்படவேண்டும்.

**7. சமூக சீர்திருத்தத்திற்காக ஓர் எழுத்தாளனின் தார்மீகப் பொறுப்பு எப்படி அமைய வேண்டும்?**

சமூகத்தில் ஏற்படும் தவறான பழக்கங்கள், நடைபெறும் அநீதிகள், சமத்துவமின்மை போன்றவற்றைச் சுட்டிக்காட்டி தன் எழுத்தின் மூலம் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நல்ல மாற்றங்களைக் கொண்டுவர தலைப்படவேண்டும். உதாரணமாக ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒரு சிறுமி ஒரு குறித்த சமூகத்தினால் திருமணத்திற்குக் கட்டாயப்படுத்தப்பட்டபோது ஒரு எழுத்தாளனின் பேனா அதைத் தடுத்து நிறுத்தியது நாமறிந்ததே.

**8. உங்கள் நூலான 'அப்பாவின் டயறி' பற்றி குறிப்பிடுங்கள்! எதிர்கால வெளியீட்டுக்காக ஏதும் திட்டங்கள், முயற்சிகள் உண்டா?**

● 2022-2024 காலப் பகுதியில் எழுதிய சிறுகதைகளில் தமிழன் வாரவெளியீட்டில் மட்டும் வெளிவந்த 15 சிறுகதைகளின் தொகுப்பு 'அப்பாவின் டயரி'. இது கடந்த ஜூலை 2024இல் முதற்பதிப்பாகவும் அதன் இரண்டாவது பதிப்பு செப்டம்பர் 2024இலும் வெளியானது.

● ஏனைய நாளேடுகளிலும் சஞ்சிகை களிலும் பிரசுரமான சிறுகதைகளின் தொகுப்பு விரைவில் 'சாம்பல் நிறப் பூனை' என்ற பெயரில் வெளிவர உள்ளது.

● அத்துடன் சஞ்சிகைகளில் பிரசுரமான புதுக் கவிதைகளின் தொகுப்பொன்றும் வெளிவரவுள்ளது.

**9. 'வெண்ணிலா' இதழ் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்!**

● 1978 எப்ரல் மாதம் 'காவியன்' என்ற புனைப் பெயரில் 'வெண்ணிலா' கலை இலக்கியச் சஞ்சிகை என்னால் வெளிக்கொணரப்பட்டது. தொடர்ந்து 12 இதழ்கள் வெளிவந்து நின்றுபோயிற்று.

● 2021 ஏப்ரல் மாதம் மீண்டும் 43 வருடங்களின் பின் 'வெண்ணிலா' காலாண்டுச் சஞ்சிகையாக வெளியிடப் பட்டு தொடர்ச்சியாக 21 இதழ்கள் வெளிவந்துள்ளன. 21ஆவது இதழ் ஆறாவது ஆண்டுச் சிறப்பிதழாக வெளிவந் துள்ளது.

**10. ஓர் இதழ் வெளியிடுவதில் உள்ள பொருளாதாரச் சிக்கல்கள், சிரமங்கள் எவை? அவற்றை எப்படி சமாளிக்கிறீர்கள்?**

கடந்த 2021 ஏப்ரல் மாதம் வெண்ணிலா கவிதைக்கான இதழாகத்தான் பிரசவித்தது. எதிர்பார்த்ததுபோல் படைப்பாளிகளிடமிருந்து நல்ல வரவேற்புக் கிடைத்தபோதும் வாசகர்கள் மத்தியில் எதிர்பார்த்த வரவேற்புக் கிடைக்கவில்லை. சந்தாக்களைப் பெற்றுக் கொள்வதிலும் பெரும் சிரமம் காணப்பட்டது. அதைத் தொடர்ந்து பல மூத்த எழுத்தாளர்களின் ஆலோசனைகளுக்கு அமைய சிறுகதைகள், கட்டுரைகள், நூல் விமர்சனங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு பல்சுவை இலக்கிய மஞ்சரியாக மாற்றங்கண்டது. இதன் பின் எதிர்பாராதவிதமாக சந்தாத்தாரர்களின் அதிகரிப்பும் விற்பனையும் துரித வளர்ச்சிகண்டு வெண்ணிலாவின் 21ஆவது இதழ் ஆறாவது ஆண்டுச் சிறப்பிதழாக 128 பக்கங்களில் வெளிவந்து தொடர்ச்சியான வருகைக்கு பச்சைக்கொடி காட்டி நிற்கின்றது.

சஞ்சிகை வடிவமைப்பு, அட்டை வடிவமைப்பு என்பன சொந்தக் கணினிக் கட்டமைப்பு மூலம் என்னால் வடிவமைக்கப்படுகின்றன. இலாப நோக்கமற்றதும் தன்னலமற்றதும் புதிய எழுத்தாளர்களுக்குக் களமமைத்துக் கொடுத்து வாசிப்பை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும் வெளியிடப்படுவதால் இதுவரை பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படடதில்லை. ஆனால் பிற கஷ்டங்கள் நிறைய ஏற்படுவதுண்டு. உதாரணமாக குறிப்பிட்ட தவணைக்குள் அச்சகத்திடமிருந்து பிரதிகளைப் பெற்றுக்கொள்ள முடியாது சங்கடப்படுவது மற்றும் எதிர்பார்த்த ஆக்கங்கள் உரிய நேரத்திற்குக் கிடைக்காமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**11. உங்களுக்கு கிடைத்த விருதுகள் கௌரவங்கள் பற்றி பகிரலாமே!**






## இலங்கை ஆளுமைகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் இலக்கியத் துறைக்குச் சிறந்த பங்களிப்புச் செய்தமைக்கான ஸ்கை தமிழ் விருது

நான் விருதுகளைப் பெரிதாக விரும்புவதில்லை. நம்மைவிடக் குறிப்பிட்ட விருதுக்குப் பொருத்தமானவர்கள் நிறையப் பேர் இருக்கலாம். அவர்கள் முறையாக இனங்காணப்பட்டு கௌரவிக்கப் படல் வேண்டும். நாம் ஒரு விருதைப்பெறும் பட்சத்தில் அவர்களது மனம் வேதனைப்படலாம் என அடிக்கடி நினைப்பதுண்டு.

- 2022 பெப்ரவரி மாதம் 08ஆம் திகதி கல்முனைப் பிரதேச செயலகம் வழங்கிய ‘கலைஞர் சுவதம் விருது 2021’

- 2024 ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி இலங்கை ஆளுமைகளைக் கௌரவிக்கும் ‘ஸ்கை தமிழ் விருது விழாவில், இலக்கியத் துறைக்குச் சிறந்த பங்களிப்புச் செய்தமைக்கான ஆளுமை விருது

- 2024 டிசம்பர் மாதம் 11ஆம் திகதி கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்திய ‘கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழாவில் 2022ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் வெளிவந்த நூல்களில் சஞ்சிகைப் பிரிவில் சிறந்த சஞ்சிகையாக வெண்ணிலா காலாண்டுச் சஞ்சிகை தெரிவுசெய்யப்பட்டு சிறந்த நூலுக்கான விருதும் பாராட்டும் பணப் பரிசும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

**12. நம் நாட்டைப் பொறுத்தவரை வாசகரின் வரவேற்பை அதிகம் பெறுவது மின்னிதழ்களா அல்லது அச்சிதழ்களா?**

மூத்த வாசகர்களின் வரவேற்பை அச்சிதழ்களும் புதிய தலைமுறை வாசகர்களின் வரவேற்பை மின்னிதழ்களும் பெறுகின்றன என்பதுதான் உண்மை. அச்சிதழ்களின் வெளியீட்டுச் செலவு அதிகம். பணம் கொடுத்து வாங்கிப் படிக்கவேண்டும். அப்படிப் பணம் கொடுக்க முன்வருவோர் மிகக் குறைவு.

இணைய சேவைகளைப் பெறச் செலுத்தும் தொகையில் மின்னிதழ்களையும் சேர்த்துப் படித்துக் கொள்வது எளிது. இன்றைய இளைய தலைமுறையின் வேகத்திற்கு ஈடுகொடுப்பது மின்னிதழ்கள்தான். உலகின் இலட்சக்கணக்கான பிரதிகளை வெளியிட்ட பெரும் நிறுவனங்கள்கூட அச்சிடுவதை நிறுத்தி மின்னிதழுக்கு மாறிவிட்டதைக் காணக்கூடியதாக உள்ளது.

**13. சில இடங்களில், சில அமைப்புகளில் விருதுகளும் வெற்றி வாய்ப்புகளும் திறமையின் அடிப்படையில் வழங்கப்படாமல், பக்கசார்பாக வழங்கப் படுவது குறித்த உங்கள் கருத்து என்ன?**

இந்தக் குற்றச்சாட்டு இன்று

நேற்று ஏற்பட்டதல்ல. இலங்கையில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் காணப்படும் ஒரு குற்றச்சாட்டு. இந்த விடயத்தில் சில அமைப்புகள் தங்களது அங்கத்தவர்களிடையே மாறி மாறி விருதுகளை யும் வெற்றிவாய்ப்புகளையும் பகிர்ந்துகொள்கிறார்கள். இங்கு திறமையோ, இலக்கியப் படைப்புகளின் தரமோ கருத்திற்கொள்ளப்படுவதில்லை. இது ஓர் ஆபத்தான நிலைமை.

"திருடனாய்ப் பார்த்துத் திருந் தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்பதுபோல் விருதுகளைப் பெற வரிந்துகட்டிக் கொண்டிருப்பவர்களும் திறமையைக் கருத்திற் கொள்ளாது வலிந்து விருதுகளைக் கொடுப்பவர்களும் தத்தம் மனச்சாட்சிப்படி நடந்துகொள்ளாதவரை இதை ஒழிக்கமுடியாது.

**14. நம் இளைய தலைமுறைக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

விருதுகளையும் பாராட்டுகளையும் மட்டுமே எதிர்பார்த்து இலக்கியத்துக்குள் காலடி எடுத்து வைக்காதீர்கள்! ஏனெனில் இன்றைய தலைமுறை எவ்வழியிலேனும், எவரைப் பிடித்தாவது விருதுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதில் ஆர்வமாக இருக்கிறார்கள். முதலில் நல்ல நூல்களை இனங்கண்டு அவற்றை வாங்கிப் படியுங்கள்! வாசிப்புப் பழக்கத்தை நாளாந்த வழக்கமாக்கிக்கொள்ளுங்கள்! ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமாவது நாளிதழ்களையோ சஞ்சிகை களையோ புத்தகங்களையோ படிக்க ஒதுக்குங்கள்! ஊரிலுள்ள நூலகங் களைப் பயன்படுத்துங்கள்! மற்றவர்களது எழுத்துக்களை மதித்து வரவேற் பளியுங்கள்! உங்களுக்குப் பிடிக்காதது இன்னொருவருக்குப் பிடித்துப் போகும். ஆதலால் எழுத்துகளை விமர்சிக் காதீர்கள்! குறிப்பாக இளைய தலைமுறைக் கவிஞர்கள் வேகமாகத் தங்களது படைப்புகளை நூலுருவாக்கத் துடிக்கிறார்கள். தப்பில்லை. ஆனாலும் நிதானமாகச் செயற்படுங்கள்! குறிப்பாக அடிக்கடி நூல்களை வெளியிடுவதைத் தவிர்த்து ஆண்டுக்கொரு முறை வெளியிடலாம் (குறிப்பாக கவிதைத் தொகுப்புகள்). தொடர்ந்து வெளியிடுவதும் விற்பதற்காகக் கையில் ஏந்திக்கொண்டு திரிவதும் எதிர்வினை உணர்வுகளை ஏற்படுத்தும். இன்றைய பொருளாதார நெருக்கடிகளின் மத்தியில் நூல்களின் விலைகளைத் தீர்மானிக்கும் போது இலாப நோக்கம் கருதாது கொள்வனவுச் சக்திக்குட்பட்ட விலையொன்றைத் தீர்மானிப்பது நல்லது.

அடுத்து மாதந்தோறும் நூற்றுக் கணக்கான கவிதை நூல்கள் வெளிவருகின்றன. சிறுகதை, நாவல், கட்டுரைத் தொகுப்புகள் மற்றும் ஆய்வு நூல்கள் பக்கமும் உங்கள் கவனத்தைச் செலுத்துவது ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

இறுதியாக, முத்தமிழ் கலசம் பிரதம ஆசிரியர் சித்தி வபீரா அவர்களுக்கும் சிறப்பாசிரியர் எனது நண்பர் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்!

**எமது சஞ்சிகைக்காக உங்கள் நேரத்தை ஒதுக்கி, மிகச் சிறப்பான கருத்துக்களைப் பகிர்ந்த உங்களுக்கும் எமது முத்தமிழ் கலசம் மற்றும் நம் ஆசிரியர் குழுவின் சார்பாகவும் வாழ்த்துகளையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அம்மா எனும் அழகோவியம்



அம்மா எனும்
மூன்றெழுத்துக்களால் ஆக்கப்பட்ட
முன்மாதிரி ஜீவன்
அவள்.

அம்மா என்பதால்
மூன்று உலகங்களையும் அன்பால்
மயங்க வைத்து அமைதியாக மௌனித்து
சிரிக்கும் அழகோவியம்
அவள்.

இன்பங்களை தூரமாக்கி மக்களின்
உயர்வில் ஆதாயம் காண மேனியை
உரமாக்கி அங்கீகரிக்கப்பட்ட நஞ்சற்ற
சேதனப்பசளை
அவள் .

உருகும் மெழுகாகி மண்ணில் மறையாத
உயர் காவியமாகி மாறா தியாகத்தில்
மிளிரும் சிற்பி
அவள்.

இடர்களை இன்பமாக்கி
தாளாத சோர்வினை
தன் சொத்தாக எண்ணி தினம் தினம்
ஓய்வு மறந்து
குடும்ப உயர்விற்கு கூலியின்றி
உழைத்து உக்கும்
உத்தம தொழிலாளி
அவள் .

சுயநலம்
தெரியாமல்
பிறர் நலம் நாடியே
நாட்களை நகர்த்தி
பாயினை தேடுகையில்
பார்ப்பார் இன்றி
பரிதவிக்கும்
உறவுகள் குவிந்த அநாதை
அவள்.


**றஹீமா இன்ஸார்**
மீராவோடை

# இளையவன் சிவா கவிதைகள்

1;
இழுவை ரயிலுக்குள்
மலை ஏறும்
மகளின் உற்சாகத்தில்
ஒளிந்து கிடக்கிறது ஒட்டுமொத்த
பழநியின் உயர் தரிசனம்.

கடவுளை வணங்கி வெளிவந்தவள்
விளம்புகிறாள்
ஆண்டியாய் நிற்பவனிடம் ஆசைகள்
கூட்டுகிறோம் என.

2
நெடுஞ்சாலை பரபரப்பில் விரையும்
வாகனங்களுக்குள்
அலாரம் எழுப்பியபடி
நுழைந்து ஊடுருவி வரும்
அபாய வண்டியில்
ஓடுகிறது உயிர்த்துடிப்பு.

பெரு விபத்தின் குருதித்தடத்தில்
பெருக்கெடுக்கும் சுயமிகளை காற்றில்
தவழவிட்டபடி

கதறும் அலைபேசிக்குள் அழுவதா
சிரிப்பதா என குழம்புகிறது
மனித நேயம்.

3
பெருமழையின்
சிறு பிள்ளையென
தலை நனைத்தும்
கால்நனைக்கா
தூறலில் நடக்கிறேன் நனையாத
நிலத்தினில் நனையும் மகிழ்வில்
தலைகாட்டும் வெயிலை
எப்படி ஆற்றுப்படுத்த?

4
நெடுஞ்சாலையின்
ஈரத்தை உறிஞ்சியபடி
விரையும் வாகனங்களுக்கு மத்தியில்
பெய்தும் பெய்யாமலும்
குழம்பித் தவிக்கும்

மழையைப் பார்த்து
கிளைக் கைகளை ஆட்டி
கேலி பேசுகிறது மரம்.

விரையும் வாகனங்களை விலக்கி
பூவின் இதழ்களுக்குள்
புயலெனப் பொழிகிறது மழை
வானத் தீண்டல் தீர்ந்த பின்னும்
கண்ணீர் வடிக்கும்
மரத்தின் கிளைகள்.

இளையவன் சிவா





## சுந்தரிமணியனின் ‘சில்லாட்டை’
### சிறுகதைத் தொகுப்பு நூல் விமர்சனம்

உலகில் எத்தனையோ பயணங்கள் அமைந்தாலும் மனதின் பயணம் தான் வாழ்க்கையின் மலர்ச்சியைத் தீர்மானிக்கிறது. சிறுவயதில் நம் வீதியே உலகமென நினைத்தோம்; வருடங்கள் செல்லச் செல்ல உலகமே நம் வீதியானது. இது எண்ணங்களின் அகலம். கிணற்றுத் தவளையாக வாழாமல் தேடல் மிகுந்துப் புறப்பட்டால் எண்ணிலடங்கா மனக் கதவுகளைத் திறப்பது அவரவர் எண்ணங் களே!

இந்த எண்ணவோட்டத்தின் முகவரியாகக் கவியரசு கண்ணதாசனின் திரைப்பாடல் வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

“பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே இருக்கும் இடம் எதுவோ... நினைக்கும் இடம் பெரிது; போய் வரும் உயரமும் புதுப்புது உலகமும் அவரவர் உள்ளங்களே நெஞ்சினில் துணிவிருந்தால் நிலவுக்கும் போய் வரலாம் ! ”

கடலின் அலையோசையைத் தாலாட்டாக உணர்வோரும், இரைச் சலாக மொழிவோரும் உலகில் ஒன்று சேரத்தான் பயணிக்கின்றனர். உணரும்மொழியும், மொழியுணர்வும் வெவ்வேறு திசைகளில் அவரவர்க்குப் பயணித்தாலும் இன்பமும் துன்பமும் நாணயத்தின் இருபக்கங்களாய் இணைந்ததுதான் வாழ்க்கை!. இரண்டையும் சமமாகப் பார்ப்ப வர்கள் மற்றும் இரண்டில் ஒன்றைச் சுகமாகவும் மற்றொன்றைச் சுமையாகவும் உணர்பவர்கள் ஆகியோருக்கு மிடையே நிகழும் உரையாடல்கள் வாழ்க்கையெனும் அகராதியின் பக்கங் களாகின்றன. அந்தப் பக்கங்களில் பதிந்துள்ள வார்த்தைகளைக் கோர்த்துக் கோர்த்துச் சிறுகதைகளைப் புனைத்திருக்கின்றார் சுந்தரிமணியன்.

சுந்தரிமணியனின் ‘சில்லாட்டை’ என்னும் தலைப்பிட்ட இந்தச் சிறுகதைத் தொகுப்பின் கைப்பிரதியைப் பெற்றவுடன் இத்தலைப்பிட்ட கதையை முதலில் படிக்கவேண்டும் என்று தலைப்பட்டேன். திருந்தாத கணவன், அவனுக்கு மருந்தான மனைவியென முதற்பின்னலே மின்னல். இந்த மின்னல் வெளிச்சத்தில் வானவில் தெரியும், பேரிடியும்விரியும், பூமழையும்பொழியும், புயலும் தென்றலும் பொழுதுகளைத் தீர்மானிக்கும் என்று புரிந்தது. இவை தானே கதைகளின் ஓட்டத்தில் நம்மையும் கைக்கட்டையைப் பிடித்து ஓடவைப்பவை!.நானும் ஓடினேன் ஒரே மூச்சாக ஓடினேன். கைப்பிரதியைக் கைநழுவவிடாமல்ஓடினேன்.ஓட்டத்தின் முடிவில் எல்லைக்கோட்டைத் தொட்டு

*வென்றது நானா...? இல்லை முனைவர் சுந்தரிமணியன்!.*

*சுந்தரிமணியன் என்னும் புனை பெயரில் இலக்கியம் படைக்கும் முனைவர் சு.சோமசுந்தரி புதூர் என்னும் சிற்றூரிலிருந்து புறப் பட்ட தமிழ்ஆளுமை. நாளும் மைதொட்டுக் கண்களுக்கு வரைதல் மட்டுமாபணி; இல்லை எழுத்துக் களை ஆளும் மைதொட்டு இலக்கியம் படைப்பதே தலையாயப் பணி என்று தமிழில் தகைசால் பணிபுரியும் இவரின் எண்ணங்கள் அனைத்தும் வண்ணங்களே! எண்ணக் கூட்டல் களை தூரிகையால் வண்ணங் களாகப் பெருக்கிய வாழ்க்கையின் வடிவமே 'சில்லாட்டை' என்னும் இச்சிறுகதைத் தொகுப்பு.*

*இவரது கதைகளை வரிக்குவரி வாசித்தபின் நெடுநேரம் யோசிக்கா மல் சட்டென உதித்த ஒற்றைவரிக் கருத்து இதோ அந்தந்தக் கதைத் தலைப்புகளோடு: அத்துமீறல்- அத்து மீறும்ஆண்களுக்குபுத்திமதி; பெண் களுக்குவெகுமதி.*

*அப்பா- இறந்தும் தன்னால் வழங்க முடியுமென்னும் ஈடில்லாஅப்பா - வழங்கியதுகாப்பீடு!*

*இறுதிச்சடங்கு - பெற்ற அன்னை இறந்த பின்னும் மனதில் இன்னும் ஈரம் பிறக்காத மகன்!*

*ஈரம்-'மனிதம்'என்ற வார்த்தை யின் ஈரப்பதம் அதன் 'புனிதம்'*

*உடைந்துபோனகலசங்கள்- கோபுரத்தைக் கலசங்கள் தாங்கு வதில்லை ,அவை உயரத்தில்; ஆனால் அவையே உடைந்தால் - அனைவரும் துயரத்தில்!*

*ஏகாந்தம்- முதிய தகப்பனின் ஏகாந்தநிலை; இருந்தும் காந்தமாய் மனைவி.*

*கடைக்குட்டி - பிடிக்காத மண வாழ்வு, பிடிவாத மனைவி - பிடிப்பில்லா வாழ்க்கை!*

*கடைசிப்பிறவி - மனமகிழ்ச்சி மட்டும்தான் வாழ்க்கையின் உந்து சக்தி !*

*கானல்நீர் – கல்லூரிக் காதலுக்கு முன்னுரை எழுதும்போதே எழுதிய முடிவுரை*

*குளியலறைவிபத்துகள் குளவியால் உருவானகூடும், குழந்தை கருவான வீடும்!.*

*சமத்துவம்- வாழ்க்கையின் தவமே சமத்துவம்; ஆணுக்குமட்டு மென்ன அமரத்துவம்?*

*தவம்- நோய்ப் படுக்கையில் கண வன்; ஆனால் வலியோ மனைவிக்கு.*

*தொங்குபாலம்- அபியின் இறப் புக்கு யார் காரணம்? விறுவிறுப்பின் முகவரி.*

*நிறைவேறாதஆசை- ஒரு அன்னை யின் சோகம்; தடுக்குமா ஆயிரம் யாகம்!*

*நீர்த்துப்போகாதநினைவுகள்- பாட்டிக்கும் பேத்திக்குமான தோட் டத்து விளையாட்டு.*

*பலகணி- பார்வை செல்லும் வழியில்தான் பயணமா..?*

பார்வைகள்- குரலுக்கு மட்டு மல்ல, மனித மனத்திற்குமுண்டு எதிரொலி

பீதி- மனதின் கிளர்ச்சியில் எரிமலை களின் மலர்ச்சி

பூனைக்குட்டியும்காதலும்- நம்மைச் சுற்றி சுற்றி வரும் கதை - பூனைக்குட்டிகளைப்போல...!

முகமூடி முகமூடியில்லாத தேசம்... அம்மாவின் கருவறை மட்டும் தான்!

முதல்குழந்தை- சங்கமியின் 'பூபூக்கும்தருணம்' என்னும் முதல் கவிதைப் புத்தகத்தில் நாமும் சங்கமம்.

ரோல்மாடல் -ஜெஸியின் குட்டிக ளோடு நாமும் விழுந்து விட்டோம் பள்ளத்தில் - அவற்றை தூக்கும் போது நாமும் துடிக்கின்றோம் -கரைசேர்க்கின்றார் கதாசிரியர்.

ஒரு மாலையில் எந்தப் பூபிடிக்கும் என்றால் சுட்டுவது கடினம். இருப்பி னும் விழி ஒரு பூவில்தானே பதியும். அப்படி என்னுள் பதிந்தபூ

'பூனைக்குட்டியும்காதலும்'. முத்திரைக் கதையாக இதைப் படித்து மலைத்தேன். அன்பில் விளையும் குடும்ப ஒற்றுமையின் குதூகலம் கதையின் கண்களில் ஒளிர்கிறது. அதனால்தான் மந்திரச்சிரிப்பொலி எந்திர வாழ்க்கையில் பசுமை பூப்ப தைத் தமிழ்மணக்க கதாசிரியர் சொல்லும் வார்த்தைகள் வாழ்க்கை யின் வண்ணங்கள்.

ஒவ்வொரு கதையின் தொடக் கத்திலும் இயற்கை வர்ணனை. அவை நம்மை நிலாவோடு கட்டிப் போடுகின்றன. புல்லின் நுனியில் ஒய்யாரமாக அமர்ந்திருக்கும் பனித் துளியில் முகம்பார்க்க வைக்கின்றன.

தோப்புக்களும், சோலைகளும், காடுகளும் சுவாசித்திருக்கின்றன; கதையினுள் நுழைந்தாலோ மலை யருவிக்காற்றில் அலைந்தலைத்து புல்லில் விழுந்த பனித்துளி எழுதிய வார்த்தைகள் ஒருபுறம், நெற்றியருவி துளிர்த்த வியர்வையின் ஒருதுளி என்னும் வாழ்க்கையின் வெப்பம் எழுதிய வார்த்தைகள் மறுபுறம். சுந்தரிமணியனின் மனவகலம் வானைத் தாண்டிச்செல்வதும், மேகந்தொட்டுக் குளிர்வதுமாகச் செயல்படும்போது படிப்பவருக்குப் பேரானந்தமே!.

இரும்பின் உறுதியோடு நம்மைக் காந்தமாக ஈர்க்கும் இவ்வெழுத் தாளரின் துருவற்ற சிந்தனைகளின் கோர்ப்பு இந்நூல்!. கரையில் நிற்பதற் கல்ல கப்பல்களின் உருவாக்கம் என்னும் கருத்தைப்போல தன் அனுபவ உருவாக்கம் தனக்குள் நங்கூரமிடாமல் உலகிற்கெனக் கூர்தீட்டப்பட்ட சிறுகதைகள்.

சமூகத்தில் சிறந்த மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய திறனையும் செயலையும் செய்ய எத்தனிக்கும் எழுத்தாளர் சுந்தரிமணியனின் பணி ஒரு சிறந்த பங்களிப்பு. அடுத்துவரும் கதைகளில் இன்னுமின்னும் மாறு பட்ட கதைக்களங்கள் வேண்டும்; அவற்றைத் தோண்டும் நாளில் மின்னும் தங்கக் கதைகள் தோன்றும் என்பது கதாசிரியருக்கு நாம் கூறும் வழிநடத்தும் செய்திகளாகும். இந்நூலுக்கும் வளர்காலப் படைப்பு களுக்கும் வாழ்த்துக்கள்.

**கவிஞர் விஜயகிருஷ்ணன்,**
சென்னை

## நற்றிணைப் பாடல்..201....

# திருநல உருவின் பாவை

## பாடியவர்... பரணர்

**மலையுறை குறவன் காதல் மடமகள்**
**பெறவருங் குரையன் அருக்கடிக் காப்பினள்**
**சொல்லெதிர் கொள்ளா இளையள் அனையள்**
**உள்ளல் கூடாதென்போய் மற்றும்**
**செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லித்**
**தெய்வம் காக்கும் தீதுதீர் நெடுங்கோட்டு**
**அவ்வெள் எருவிக் குடவரை யகத்துக்**
**கால்பொரு திடிப்பினும் கதழுறை கடுகினும்**
**உருமுடன் றெறியினும் ஊறுபல தோன்றினும்**
**பெருநிலம் கிளறினும் திருநல வுருவின்**
**மாயா இயற்கைப் பாவையின்**
**போதல் உள்ளாள்என் நெஞ்சத்தானே**

*ஒரு தலைவன் ஒரு தலைவி பால் காதலுற்றான். அது பொருந்தாது என தலைவனின் பாங்கன் அதனை மறுத்து உரைக்கின்றான் பொருந்தாதற்கான காரணங்களையும் தலைவனுக்கு உரைக் கின்றான். அப்படிக் கூறிய பாங்கனுக்கு தன் நிலை உணர்த்தி உரைப்பது போல் தலைவனின் கூற்றாக அமைந்த செய்யுள் இது.*

*தலைவன் விரும்பி மணம் செய்தா லன்றி அவளை அடைதல் இயலாது என்றும், வெளிவந்து அவளும் உன்னைக் காண இயலாது, நீயும் அவளைச் சென்று காண்பதரிது என்றும், அப்படியே நீ சென்று முயன்று அவளைப் பார்த்தாலும் நின் பேச்சுக்கு அவள் இசைவு சொல்ல முடியாத இளம் பருவத்தவள் என்றும் பகர்கிறான்.*

*தலைமகன் கலங்காது, திருநல உருவின் மாயா இயற்கையுடைய கொல்லிப் பாவைப் போல் அவள் என் உள்ளத்தில் அமர்ந்து விட்டாள். இனி அதிலிருந்து அவள் போகமாட்டாள் என்கிறான்.*

*மதங்கள் காதலை வெறுப்பதில்லை*

*பூங்குன்றா நின் காதல் கைகூட வழியில்லை, நீ அந்தக் காதலை மறந்து விடு , அதுவே உனக்கு நல்லது*

*இனியா ஏன் அப்படிச் சொல்கிறாய், என் மனதில் தோன்றிய காதல் புனிதமானது.*

*சாதியும் மதமும் வேறு வேறு என்ற நிலையில் நீ இந்தக் காதலில் தோல்வி அடைய நேரும். அதனால் தான் வேண்டாம் என்கிறேன்.*



அதை நானும் என் காதலியும் ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை. வேறு காரணங்கள் இருக்கின்றனவா?

ஆம். அவளுடைய பெற்றோர் வசதி வாய்ப்பில் உச்ச நிலையில் இருக்கின்றனர். ஏணி வைத்தாலும் எட்டாத நிலை உனக்கு,

நீ அவளை விரும்பி அவளுடைய பெற்றோர் ஒப்புக் கொள்ளாவிட்டால் நீ அவளை அடைய முடியாது , வீட்டை விட்டு வந்து அவளும் உன்னைக் காண இயலாது. நீயும் அவளைப் பார்க்கும் சூழ்நிலை உனக்குக் கிட்டாது. அப்படியே நீ போனாலும்

அவளைக் கேட்டாலும் அவள் உனக்கு பதில் சொல்ல இயலாத இளம் பெண். இதனாலெல்லாம் தான் நான் நீ அந்தப் பெண் பாத்திமாவைக் காதலிப்பது கைகூடாது என்கிறேன். நீ என் நண்பன், உனக்கு உண்மை நிலையை எடுத்துக் கூற வேண்டியது என் கடமை. அதனால் தான் சொல்கிறேன்.

நீ சொல்வதெல்லாம் சரி தான். ஆனால் அவள் காதல் தெய்வமாய் என் மனதிற்குள் நுழைந்து விட்டாள், நானே அவளைப் போகச் சொன்னாலும் கூட அவள் என்னிடமிருந்து போகமாட்டாள்.

என் காதலில் நான் வெற்றி அடைவேன். அவளும் நானும் கணவன் மனைவியாய் ஆகும் நாள் வெகு தூரத்தில் இல்லை. பொறுத்திருந்து பார் என்று சொன்ன பூங்குன்றன் அங்கிருந்து சென்றுவிட்டான்.

இனியன் சொல்லியது போல் பாத்திமா இளம் பெண் தான்.ஆனால் காதல் அவளை அறிவான பெண்ணாய் மாற்றியிருந்தது.

அவள் தன் பெரியம்மாவிடம் தன் காதலை விரிவாகச் சொல்லி தனக்கு உதவும்படி அவர் மடியில் படுத்து அழுதாள். நாங்கள் எந்த வரம்பையும் மீறாத அன்பு கொண்டவர்கள். என்னால் அவரைப் பிரிய முடியாது, அவரும் என்னைப் பிரிய மாட்டார்

பெரியம்மா பானுவுக்கு அவள்மீது மிகுந்த பிரியம் இருந்ததால் அவர் மனம் வருந்தியது.

தன் கணவரிடம் பக்குவமாய் அதை எடுத்துச் சொன்னாள். பானுவின் கணவன் அவள்மீது மிகுந்த அன்பு கொண்டவன்.

அவன் தன் தம்பியிடம் இதைப் பக்குவமாய்ச் சொல்கிறேன்.

தம்பி மசூத் மதப் பித்து அதிகம் கொண்டவன் தான். நான் சொன்னால் அவன் தட்டமாட்டான். நான் அவனைப் பார்க்கிறேன் என்று சொல்லி அங்கிருந்து அகன்றான் இஸ்மாயில்

என் பெண் பாத்திமாவுக்கு இந்தச் சின்ன வயதில் காதலா?

நமது பணத்திற்கு ஆசைப்பட்டு விட்டானா அவள் காதலன்.

நான் அவனைப் பற்றி நிறைய விசாரித்து விட்டேன். அந்தப் பையன் மிக நல்லவன் என்றும் தற்போது நல்ல வேலையிலிருக்கிறான் என்றும் அறிந்தேன். கெட்ட பழக்கங்கள் ஏதும் இல்லாதிருக்கிறான். அவனுடைய அப்பா அம்மா மிகவும் அப்பிராணிகள். நாம் அங்கு போனாலே பயந்து நடுங்கக் கூடியவர்கள்.

சரி அண்ணா நீ சொல்கிறாய் என்பதால் நான் இதை ஏற்கிறேன்.

அவனை நம் மதத்திற்கு மாற்றிக் கொள்ளலாமா?

பெண்கள் தான் மதம் மாற வேண்டியிருக்கும், தாய் வழி சமூகம் என்பதால் அது ஒரு வகையில் நமது பெண்ணுக்கும் பாதுகாப்பானது தான்.

அப்படியானால் அவள் என் மகளாக இருக்க மாட்டாளா?

பாத்திமா உன் மகள் என்பதும் அவள் எந்தப் பெயரில் மாறினாலும் அவள் உன் பெண் என்பதை யாரும் மறுக்க முடியாதே. அந்தப் பையனும் அதற்கு ஒத்துழைக்கவே செய்வான். அதை நம் பெண் பார்த்துக் கொள்வாள்.

நல்ல இரு உள்ளங்களைச் சேர்த்து வைப்பது தான் சிறப்பு என்பதால் நான் இதைச் சொன்னேன். எனக்கும் அவள் மகள் தான் என்பதை யாரும் மறக்கமாட்டார்கள், அவளுடைய பெரியப்பா நான் என்பதும் மாறாது. பிறகு உன் விருப்பம்.

அண்ணா நீங்கள் சொன்ன பிறகு நான் மறுப்பு சொல்வேனா?

அந்த பூங்குன்றனைவும் அவன் பெற்றோரையும் நாம் நாளை சென்று பார்ப்போமா, நம் மனைவியரிடம் இதைப் பக்குவமாய் சொல்வோம். சரியா?

அடுத்த நாள் பூங்குன்றன் வீட்டிற்கு இஸ்மாயில் அவன் மனைவி பானு மற்றும் மசூத் அவன் மனைவி ரசியா மற்றும் சில பெண்கள் என ஒன்றாகச் சென்றனர்.

பூங்குன்றன் வீட்டில் அவனுடனிருந்த இனியன் இந்தக் காட்சியைப் பார்த்து தன் நண்பனிடம் சொன்னான். பூங்குன்றனின் பெற்றோரோ அவர்கள் சண்டையிட வருகிறார்களோ என்ற பயத்தில் இருந்தனர்.

வந்தவர்கள் பூ பழங்களைத் தட்டில் வைத்து அதை பூங்குன்றனின் பெற்றோர்களின் கைகளில் ஒப்படைத்து 'எங்கள் பெண் பாத்திமாவை உங்கள் மகனுக்குத் திருமணம் செய்ய நாங்கள் விரும்புகிறோம். நீங்களும் ஒப்புக் கொள்கின்றீர்களா' என்றனர்.

பேந்தப் பேந்த விழித்த பெற்றோர் பூங்குன்றன் அவர்களிடம் 'அதை வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொன்ன பிறகு தான் அவர்கள் அதை வாங்கிக் கொண்டார்கள்.

பூங்குன்றன் பாத்திமாவின் பெற்றோரையும், இஸ்மாயில் பானுவையும் தலை வணங்கி நின்றான்.

'நான் உங்கள் பெண் பாத்திமாவை என் உயிரினும் மேலாக பாதுகாத்துக் கொள்வேன். பயப்படாதீர்கள்' என்றான்.

எல்லோருக்கும் அதற்குள் காபியும் மிக்சரும் வரவழைத்துத் தந்தனர் பூங்குன்றனின் பெற்றோர்.

என்று திருமணம் வைத்துக் கொள்ளலாம் என்றும் மற்றவை பற்றியும் பேசிய பிறகு மகிழ்வுடன் எல்லோரும் கலைந்து சென்றனர்.

இந்தக் காட்சிகளைப் பார்த்த இனியன் பிரமித்து நின்றான் காதலின் வலிமையைப் பார்த்து.

**புல்லாங்குழலன்.**



# சிதைக்கப்பட்ட உள்ளங்கள்

**திருமதி.மதுவர்மன்**
*இத்தாலியிலிருந்து*



வருணின் அப்பா நீண்டகாலமாக ஒரு தீராத நோயினால் அவதிப்பட்டு வந்த நோவின் வேதனை தாளாமல் மிக சிரமப்பட்டவர்,

ஒரு கட்டத்தில் தற்கொலை செய்து கொண்டார். வருண் பல வருடங் களாக இத்தாலியில் கடினமாக உழைத்துக் கொண்டிருந்தான். அவன் உயிருக் குயிராகக் காதலித்தவள் மதி. வருண் ஒரு தங்கமான பிள்ளை, தன் குடும்பத்துக் காகவே உழைப்பவன்.

ஆனால், வருணின் அப்பா இறந்த செய்தி கேட்டதும் ஊர் உலகம் சும்மா இருக்கவில்லை.

'வருண் காதலிச்ச நேரத்திலை மதிக்குத்தான் எல்லா காசையும் அனுப்பி னவன், அப்பாவைக் கவனிக்கேலை. அதாலை வந்த மன உளைச்சலாலைதான் அவர் இப்பிடி ஒரு முடிவை எடுத்தவர்' என்று வாய் கூசாமல் வதந்திகளைப் பரப்பினார்கள்.

அப்பாவின் மரணச் சடங்குக்காக வருண் ஊருக்கு வந்தான்.

நீண்ட வருடங்களுக்குப் பிறகு தன் தந்தையை உயிரற்ற உடலாகப் பார்த்த வருண், நிலத்தில் விழுந்து புரண்டு கதறினான்.

'அப்பா, உங்களை இந்தக் கோலத் திலயே நான் வந்து பாக்கோணும்? உங்களுக்கு நான் என்ன குறை வைச்சனான்? ஏன் அம்மாவைத் தவிக்கவிட்டுட்டுப் போனீங்கள்? நீங்கள் செய்த காரியத்தால ஊரிலை உள்ளவை எங்களை எவ்வளவு கேவலமாப் பேசப்போயினம் தெரியுமே?'

அந்தத் துயரமான சூழலிலும் மதியைத் தனியாக்க விரும்பாத வருண், சடங்குகள் முடிந்த கையோடு மதியைக் கரம் பிடித்தான்.

சில காலத்திலேயே வருண் மீண்டும் இத்தாலிக்குப் பயணமானான்.

இரண்டு வருடங்களுக்குப்பின் மதி இத்தாலிக்கு வருணிடம் வந்து சேர்ந்தாள். ஆனால், ஊரில் அவளைத் துரத்திய அந்தப் பொய் வதந்திகளும், மன உளைச்சலும் இத்தாலியிலும் அவளை விடவில்லை.

இதனால் வருண், மதி ஆகிய இரு குடும்பத்தினருமே மனவேதனை அடைந்தார்கள்.

இத்தாலியின் குளிர்கால மாலைப் பொழுது. ஜன்னலுக்கு வெளியே

பெய்யும் பனித்துளிகளை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் மதி. அவள் கண்கள் கலங்கியிருந்தன. கடந்த கால நினைவுகளும், ஊர் மக்களின் நச்சு வார்த்தைகளும் அவளை நிழலாய் துரத்திக்கொண்டிருந்தன.

தொலைபேசி சிணுங்கியது. கவி அக்கா தான் அழைக்கிறாள்.

தயக்கத்துடன் போனை எடுத்தாள் மதி.

'ஹலோ, மதி... என்னம்மா பண்ற? ஏன் குரல் ஒரு மாதிரியா இருக்கு?' - கவியின் குரலில் அக்கறை ததும்பியது.

மதியால் கட்டுப்படுத்த முடியவில்லை.

'அக்கா... என்னால முடியலக்கா,' என்று விம்மி அழுதாள்.

'என்னம்மா ஆச்சு? வருண் கூட ஏதாவது சண்டையா?'

'இல்லக்கா... வருண் தங்கம். ஆனா இந்த உலகம்... அந்த மனுஷங்க பேசற பேச்சு...'

'மறுபடியும் அந்தப் பழைய கதையா? ஊர்ல பேசுனது பத்தாதுன்னு இங்க இத்தாலியிலயும் ஆரம்பிச்சுட்டாங்களா?'

'ஆமாக்கா. வருணோட அப்பா தற்கொலை செஞ்சதுக்கு நான்தான் காரணம்னு இன்னும் சொல்லிட்டு இருக்காங்க. வருண் எனக்குத்தான் காசு அனுப்புனானாம், அப்பாவைக் கவனிக்கலையாம். அதான் அவர் மன உளைச்சல்ல செத்துட்டாராம். எப்படி அக்கா இப்படிப் பொய் சொல்ல முடியுது?'

'மதி, உலகம் எப்பவுமே அப்படித் தான். எரியுற நெருப்புல எண்ணெய் ஊத்த ஒரு கூட்டம் காத்துட்டே இருக்கும்.'

'அவங்களுக்கு என்ன தெரியும் அக்கா? வருண் தன் தம்பியைச் சிறையில இருந்து மீட்க எவ்வளவு கஷ்டப்பட்டான்னு எனக்குத் தெரியும். அவன் அக்காவுக்கு வீடு கட்டிக் குடுக்கப் பகல் இரவுன்னு மாடா உழைச்சது எனக்குத் தெரியும். ஆனா ஊர்ல என்ன சொல்றாங்க? எனக்கு வீடு கட்டிக் குடுக்கத்தான் அவன் உழைக்கிறான்னு அசிங்கமாப் பேசுறாங்க.'

'வருணுக்கு இது தெரியுமா மதி?'

'தெரியும்கா. வருண் ஊருக்குப் போனப்போ அவன் கையில காசு இல்லை. எங்க அம்மாதான் அவனுக்குப் பண உதவி செஞ்சாங்க. ஆனா இவங்க, வருண் எங்க வீட்டுக்குக் காசு கொட்டுறதா கதை கட்டுறாங்க. எங்க அம்மா இதனால ரொம்ப மன உளைச்சல்ல இப்பவும் இருக்காங்க அக்கா.'

'உங்க அம்மா கிட்ட பேசுனியா?'

'பேசுனேன் அக்கா. 'சுடு சாம்பலுக்குள்ள தத்தளிக்கிற புழுவா துடிக்கிறேன்'னு சொல்லி அழுதாங்க.



இங்க இத்தாலியில இருக்கிற சில சொந்தங்களும் விடமாட்டேங்கிறாங்க. வருண், மதியோட பழகாதீங்கன்னு மத்தவங்ககிட்டயும் விஷத்தைக் கக்குறாங்க.'

'வருண் இதையெல்லாம் எப்படி எடுத்துக்கிறான்?'

'எல்லா வலிகளையும் மனசுக்குள்ள சுமந்துகொண்டு அவனால எப்படி முடியுதுன்னே தெரியலக்கா. முதுகுல குத்துறவங்ககிட்டயும் சிரிச்சுப் பேசுறான். எனக்குப் பல்லக் காட்டிக்கிட்டு நடிக்கத் தெரியல. செருப்பைக் கழட்டி அடிக்கணும் போல ஆத்திரம் வருது. இதனாலயே 'கூட்டுக்குள்ள அடைபட்ட கிளி மாதிரி' வீட்டுக்குள்ளயே முடங்கிக் கிடக்கேன்.'

'மதி, ஒரு நிமிஷம் நான் சொல்றதைக் கேளு,' கவி நிதானமாகத் தொடங்கினாள்.

'சொல்லுங்க அக்கா.'

'மனநிம்மதி வேணும்னா சில நேரம் குருடாகவும், பல நேரம் செவிடாகவும் இருக்கணும். வதந்தி பரப்புவது சிலருக்குத் தொழில். அதை நீ உன் மனசுக்குள்ள ஏத்திக்கிட்டா, அவங்க ஜெயிச்சிடுவாங்க.'

'ஆனா அக்கா, இது அநியாயம் இல்லையா?'

'அநியாயம்தான். ஆனா காய்த்துக் குலுங்குற மரத்துல இருந்து அழுகின பழங்கள் தானாவே கீழே விழும். அதுபோல, உனக்குத் துன்பம் குடுத்த வங்களுக்கு வேற ஒருத்தர் மூலமாத் தண்டனை தானா வந்து சேரும். மத்தவங்களை மன உளைச்சலுக்கு ஆளாக்குறவங்க ஒருவகையில மனநோயா ளிகள்.'

'எனக்கு ரொம்ப பயமா இருக்கு அக்கா. இதெல்லாம் எப்போ முடியும்?'

'வருண் உன் கூட இருக்கான்ல? அவனோட அன்பும் ஆதரவும் இருக்கும் போது வேற என்ன வேணும்? ஆயிரம் பேர் ஆயிரம் சொல்லட்டும். நீ யார்னு உனக்கும் வருண் குடும்பத்துக்கும் தெரிஞ்சாச் சரி. மத்தவங்களை திருத்த உன்னால முடியாது.'

மதியிடம் நீண்ட மௌனம்.

'மதி... இருக்கியா?'

'இருக்கேன் அக்கா. நீங்க சொன்னது சரிதான். எங்க இறந்த காலத்தையே நினைச்சு அழுதுட்டு இருந்தா, எங்க ளோட நிகழ்காலம் எங்களை விட்டுப் போயிடும். 'கர்மா'ன்னு ஒன்னு இருக்கு. அது அவங்களைப் பாத்துக்கும்.'


'அப்படியே இரு மதி. அந்தத் தெளிவுதான் உனக்கு வேணும்.'

'இப்போ என் மனசுக்கு ரொம்ப நிறைவா இருக்கு அக்கா. இவ்வளவு நாள் ஒரு இருட்டுக்குள்ள இருந்த மாதிரி இருந்தது. இப்போ வெளிச்சம் தெரியுது.'

'சந்தோஷம் மதி. வருணைக் கவனிச் சுக்கோ. அடுத்தவங்க பேச்சைத் தூக்கிப் போட்டுட்டு உன் வாழ்க்கையை வாழ்.'

'சரிங்க அக்கா. ரொம்ப நன்றி.'

தொலைபேசியைத் துண்டித்தபோது மதியின் முகத்தில் இரண்டரை வருடங்களுக்குப் பிறகு ஒரு பிரகாசம் தெரிந்தது. ஜன்னலுக்கு வெளியே பெய்த பனி, இப்போது அவளுக்குக் குளிர்ச்சியாகத் தெரிந்தது, வலியாக இல்லை வசந்தமாக...



நூல் விமர்சனம்

# 100 வாழ்க்கை பாடங்கள்

புகழனைத்தும் எல்லாம் வல்ல இறை வனுக்கே உரித்தாகட்டும் .

ஸலாத்தும் ஸலாமும் எமது இறை தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களை பின்பற்றும் நல்லடியார்கள் மீதும் உரித்தாகட்டும்.

ஓய்வு நேரங்களை புத்தக வாசிப்புகளுக்காக ஒதுக்கி, நல்ல நூல்களை வாசித்துப் பயனடைந்து, அதன் சிறப்புகளை அறிந்து, பிறரும் பயனடையும் வகையில் பகிர்ந்து கொள்வதில் ஒரு சிறு சந்தோச ஊற்று என்னுள் தோன்றுவதாகவே உணர்கின்றேன்.

அந்த வகையில் அண்மையில் அரும் பெரும் பொக்கிஷமான '100 வாழ்க்கை பாடங்கள்'

என்னும் பெறுமதி மிக்க நூல் வாசிக்க கிடைத்தது. (நூலின் உள்ளே வசிக்கக் கிடைத்தது. என்பதே சரியான பதம் என நினைக்கிறேன்.) அல்ஹம்துலில்லாஹ்.

கடந்த நான்கு தசாப்தங்களாக தங்களது அருமையான பேச்சாலும், எழுத்தாற்றலினாலும் சமூகத்துக்கு பெரும் ஆன்மீகத் தொண்டாற்றி வரும் பெருமதிப்புக்குரிய உஸ்தாத் ஏ.ஸீ அகார் முஹம்மத் அவர்கள் இந்த நூலை எழுதி இருக்கிறார்கள்.

நூல் பற்றி கேள்விப்பட்டு, வாசிக்க வேண்டுமே என்ற ஆவலில் இருந்த போது, எமது குடும்ப நண்பர் சகோதரர் அஸீஸ் அவர்களின் (தனது அன்புத் தந்தையாரின் நினைவாக) அன்பளிப்பாக இப்பெறுமதியான நூல் என் கரம் கிட்டியது .

இன்ஷா அல்லாஹ் இறைவன் அவருக்கான நற்கூலியை நிச்சயமாக வழங்குவான்.

உண்மையிலேயே அனைவரும் வாசிக்க வேண்டிய,

குறிப்பாக இளம் சமுதாயத்தவரின் கைகளில் தவழ வேண்டிய அற்புத நூல்.

பெறுமதி மிக்க இந்த நூலில் உள்ள டங்கியுள்ள அனைத்து விடயங்களும்

நமது இம்மை, மறுமை நல்வாழ்வுக் கான உன்னத வழிகாட்டியாகவும், திறவுகோலாகவும் காணப்படுகின்றன.

இந்த நூல் பற்றி நான் பேசுவது 'குருவி தலையில் பனங்காய்' போன்ற கனதியான நிலைதான்.

ஆனாலும் நூல் பற்றி ஓரிருவரி டமாவது எத்தி வைத்து, அவர்களும் வாசித்து பயனடைந்தால், நலவான பெரும் சமுத்திரத்திலிருந்து ஒரு துளியாவது பெற்றுக் கொள்வது போன்ற நலவை நாமும் பெற்று விடலாம் என்ற ஒரு நப்பாசையில் எழுதுகின்றேன்.

இந்நூல் பற்றி நான் பேசுவதை விட இந்நூல் உங்களிடம் அதிகம் பேசும் என்பதுதான் நிஜம்.

அழகியகனதியானஅட்டையுடன்370 பக்கங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 100 பாடங்களையும் வாசிக்கும் போது, உஸ்தாத் அவர்கள் ஒலிவடிவில் அமைதியாக, ஆழமானதாக, இரத்தின

சுருக்கமானதுமாக நேரடியாகப் பேசி புரிய வைப்பது போன்ற உணர்வையே இந்த நூல் நமக்குத் தருவது அவர்களின் அறிவு அனுபவ முதிர்ச்சியின் வெளிப் பாடு என்பதுதான் உண்மை . மாஷா அல்லாஹ்.

நமது ஆன்மீக வாழ்வையும் லௌகீக வாழ்வையும் போஷித்துப் பலப் படுத்திக் கொள்ள, அல்குர்ஆன், சுன்னா வையும் ஆரம்பகால சமகால அறிஞர் களின் கருத்துக்களையும், அடிப்படை யாகக் கொண்டே பாடங்கள் எழுதப் பட்டுள்ளன.

அடையாள புருஷர்களாக கொள்ளத் தக்க பிற்பட்ட காலத்திலும், சமகாலத் திலும் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டி ருக்கின்ற சில ஆளுமைகளின் வாழ்வும் பணிகளும் பற்றியும் சில பாடங்கள் பேசுகின்றன என மாண்புமிகு உஸ்தாத் அவர்கள் தங்களது முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கடின தேடல்களின் பொருட்டு மிகப் பெறுமதி மிக்க அம்சங்கள் இப்பனுவலுக்குள்ளே உள்ளடக்கப்பட்டி ருப்பது தெளிவு.

நூலாக்கத்திற்கான உழைப்பின் பெறு மதியையும், இதற்காக எவ்வளவு கால நேரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதனையும் நூலை வாசிக்கும் அனைவராலும் புரிந்து கொள்ள முடியும்.

நூலின் முதல் பாடமே 'வஹியே தீர்வு' எனும் தலைப்பில் வேத வெளிப் பாட்டின் முக்கியத்துவம் உணரப் படாமையின் விளைவினால், இவ்வுலகம் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்,

அதற்கான தீர்வு, நாம் அனைவரும் அல்குர்ஆனின் பக்கமே திரும்ப வேண்டிய காலமிது.

வேறு வழியே இல்லை.

அதன் ஒளியின் பக்கமே நாம் அனைவரும் திரும்புவோம் என்பத னையும் இப்பாடத்தின் மூலம் உணர்த்தி யிருக்கிறார்கள்.

அடுத்து சிந்தித்தலை நமது நாளாந்த நடைமுறை வாழ்வியல் வணக்கமாக மாற்றிக் கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும் என்பதையும் அல்குர்ஆன் வசனங்களை கொண்டு விளக்கும் அழகிய பாடமாக 'சிந்தித்தல் ஒரு வணக்கம்' என்ற தலைப்பில் தந்திருக்கிறார்கள்.

'திக்ர் என்ற வணக்கத்தில் ஈடுபடுவது போன்று, ஃபிக்ர் என்ற வணக்கத்திலும் ஈடுபடுவோம்' என நமது சிந்தனையை தூண்டி விடுகிறார்கள்.

மூன்று வகையான அறிவையும் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் விளக்கி, 'அறிவைப் பயன்படுத்தி, நமது இறுதி இலக்கான அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை அடைந்து கொள்வோம்' என்கிறார்கள்.

'அணிதலும் களைதலும்' எனும் தலைப்பில் நற்குணங்களை அணிதலும், துர்க்குணங்களைக் களைதலும் நம் மார்க்கம் என்பதையும், 'நன்மை செய்வோம், நலம் பெறுவோம்' எனும் தலைப்பில் 'அஸ்தஃபிருல்லாஹ்' என அடிக்கடி மொழிந்து பாவ மீட்சி பெறுதலின் முக்கியத்துவத்தையும் விளக்கு கின்றார்கள்.

அதுபோன்று 'மறப்போம் மன்னிப்



போம்' எனும் தலைப்பில், மன்னிக்கும் பாங்கு இறை விசுவாசிகளின் முக்கியமான பண்பு என்பதனையும் அல்குர்ஆனிய விளக்கத்தோடு கூறி இருக்கும் உஸ்தாத் அவர்கள், நாவைப் பேணாமையின் விபரீதத்தையும் எச்சரிக்கிறார்கள்.

'அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது போலவே, அவனது அடியார்ளுக்கும் நாம் நன்றி பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்' என 'நன்றி மறவோம்' என்ற தலைப்பில் அழகாக குறிப்பிடுகிறார்கள்.

சகோதர உறவைப் பேணிக் கொள்வது, ஈருலக வெற்றியான பொறுமை காப்பது, அவசரமின்றி எதிலும் நிதானத்தை மேற்கொள்வது, அனைவரிடமும் மென்மையாக நடந்து கொள்வது,

நமது தாய் பண்பான அன்பை அடிப்படையாகக் கொண்டு வாழ்வது, நேர காலங்களின் முக்கியத்துவம், போன்ற அழகிய வாழ்வியல் தத்துவங்கள் இந்த நூலில் தொடராக கோர்க்கப் பட்டிருக்கின்றன.

'அஜ்னபி- மஹ்ரமி வரையறை பேணப்படுவது, பெண் இத்தாவில் இருக்கும் போது மட்டும் தான்' என்ற நிலை ஏற்பட்டிருப்பது கவலை தருகிறது.

என அந்தத் தலைப்பில் நான்கு பக்கங்களில் விளக்கி இருக்கும் அம்சங்கள் இன்றைய காலத்துக்கு மிகத் தேவை என்பதை உணர்த்துகின்றது.

'தூக்கம் ஓர் அருள்; ஓர் அமல்' என்ற தலைப்பில் விளக்கமளித்து, 'அதிக தூக்கம் ஆபத்தானது' என்ற தலைப்பில் எச்சரிக்கிறார்கள்.

'ஒரு இலட்சிய பெண்ணின் வாழ்வும் மறைவும்' என்ற பாடம் நம் சமூகத்திலும் பல இலட்சியத் தாய்மார்களை நிச்சயம் உருவாக்கும் . தொழுகையில் மறதியா?, உங்களது துஆக்களுக்கு பதில் கிடைக்க வேண்டுமா? இது ஒரு சுவனத்து புதையல், முஹாஸபா எனும் சுய விசாரணை, இறுதி முடிவு நல்ல முடிவாக அமைய வேண்டுமா? என்ற தலைப்புக்களில் உள்ள விடயங்களை மீண்டும் மீண்டும் வாசித்து மீட்டிக் கொள்வது அவசியம்.

முத்தாய்ப்பாக 'இன்னும் நூறு ஆண்டுகளின் பின்' என்ற பாடம் நமக்கு உணர்த்துவது என்ன என்பதை சிந்திப்போமானால், இவ்வுலக வாழ்வின் அற்ப நிலை நம் அனைவருக்கும் புரிந்து விடும்.

எதைப் பேசுவது, எதை விடுவது என்று புரியவில்லை எல்லா தலைப்பையும் பேசிக்கொண்டே செல்லலாம் போல் உள்ளது. இங்கு அது முடியாதல்லவா?

இந்த நூலை வாங்கி குடும்பத்தவரோடு சேர்ந்து படித்து பாருங்கள்! உங்கள் வீடுகளில் உள்ள புத்தக அலுமாரிகளில் இந்த நல்ல நூலை எதிர்கால சந்ததியினருக்காக சேமித்து வைத்துக் கொள்வது இந்த நூல் எழுதப்பட்ட நோக்கம் நிறைவேற ஏதுவாக இருக்கும்.

எமது உஸ்தாத் அவர்கள் கூறுவது போன்று நீதி ,தூய்மை, வாய்மை ஓங்கப்பெற்ற அழகான தார்மீக சமுதாயம் தோற்றுவிக்க, ஆன்மீக வங்குரோத்து வறுமை நீங்க, சமுதாய பண்பாடு ஒழுக்கம் தட்டி எழுப்பப்பட, உளவியல் மன அழுத்த பிரச்சினைகளுக்கு சிறந்த ஆன்மீக நிவாரணியாக, நம்மை மேம்படுத்த இந்த நூலின் ஒவ்வொரு பக்கங்களும் நமக்கு நிச்சயம் துணை புரியும்.

நமது மதிப்பிற்குரிய நூலாசிரியர் உஸ்தாத் அவர்கள் நோய் நொடியற்ற நீண்ட ஆயுளுடன் மேலும் மேலும் இப்படியான நல்ல நூல்களை நம் சமுதாயத்துக்கு வழங்க வேண்டும் என இறைவனை பிரார்த்திப்போம்.

**ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்.**
**கிண்ணியா.**

# திருப்தியான ஹஜ் பயணம்

மக்கொனை நிலா

'ஷாஹித்..ஒட்டோ வந்துட்ட.. டக்கென்டு வாங்க..' என்று தாய் பரீனா கூக்குரலிட, 'வாரா..வாரா.. கொஞ்சம் நில்லுங்க...மமீ ஏன்ட ஏஷ் கலர் ஷேர்ட் எங்க..?' என்றான் மகன்.

'ம்...ஈக்கிறத ஒன்ட போட்டுட்டு வா...' என்றவாறே எரிச்சலுடன் மீண்டும் வீட்டினுள் நுழைகிறாள்.

இருவரும் முச்சக்கர வண்டியில் ஏறி அவசர அவசரமாக தம்பி பைஸானின் வீட்டிற்குச் செல்கிறார்கள். அங்கே தான் பரீனாவின் தாய் ஸதீகாவும் வசிக்கிறாள்.

'உம்மா....தம்பி நிக்கா..? என்று கேட்டுக்கொண்டே உள்ளே வருகிறாள் பரீனா.

'பரீனா..ஏ..இத மாரி மூச்சுமுட்ட வந்தீக்கிற...? ஏ இவ்ளோ அவசர மாக...கோல் பண்ணியிருந்தா நான் வாரதானே...' என்று ஸதீகா கேட்கவும், 'இல்ல உம்மா..நான் தம்பிய பார்க்க தான் வந்த...தம்பி...எங்க...' என கேட்கிறாள்.

'ஷஸ்னா...பைஸான் எங்க...? கீழ வர சொல்லுங்க...பரீனா வந்தீக்கி என்டு சொல்லுங்க..' என்று மாமி மருமகளிடம் ஏவுகிறாள்.

பைஸானும் இரண்டு பெண் பிள்ளைகளும் தனியான ஒரு வீட்டில் வசிக்கிறார்கள் .ஸதீகாவுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தாலும் கடைசி மகன் பைஸானுடன் தான் இருக்க ஆசைப்பட அவனும் இதற்கு சம்மதித்து விட்டான். பைஸான் நன்றாகப் படித்து வெளிநாட்டில் வேலை செய்து நிறைய உழைத்து சொந்தமாக வியாபாரம் தொடங்கி பல சொத்துக்களுக்கு சொந்தக்காரனாகி விட்டான். அதுதான் அவனும் தானே தன் தாயை கடைசி வரைக்கும் கவனிக்கிறேன் என்று உறுதியளித்தான். ஏதாவது கொடுக்கல் வாங்கலில் சிக்கல் என்றாலும் முதலில் இவனிடம் ஓடி வருவார்கள் அவனுடைய உடன் பிறப்புகள்.இவனும் இயன்றளவு உதவிகளை செய்து வருகிறான்.

'தாத்தா... தாத்தா.. என்ன யோசன....' என்று மாடிப்படிகளிலிருந்து கீழே இறங்கி வருகிறான் பைஸான்.

சிந்தனையில் மூழ்கியிருந்த பரீனா திடுக்கிற்று, 'தம்பி ஒரு முக்கியமான விஷயமாக தான் நான் இங்க வந்த...' என பரீனா சொல்லவும், 'அக்ரம் மச்சான்ட செய்தி என்ன..? அவர டொக்டர்ட்ட காட்டினா..? என்னவாம்....' என்று பரீனாவின் கணவனைப்பற்றி விசாரிக்கி றான் தம்பி.பரீனாவின் கணவனுக்கு அடிக்கடி நெஞ்சு வலி ஏற்படுகின்றது. என்றாலும் அவள் கணவன் இதில் அலட்சியமாகவே இருக்கிறான். பரீனா வால் இதை தாங்க முடியாமல் அவளே ஒரு வைத்தியரை நாடி என்ன பிரச்சினை என்று அறிந்தாள்.வைத்தியரின் முடிவின் படி அவளுடைய கணவனுக்கு ஏழு அடைப்புகள் நெஞ்சில் இருப்ப தாகவும் அதனை மிக அவசரமாக சத்திர சிகிச்சை செய்ய வேண்டும் என வைத்தியர் சொல்லி இருக்கிறார். இதனால் பதற்றமடைந்த பரீனா இதற்கான பணத்தை எவ்வாறு ஏற்பாடு செய்வது என செய்வதறியாது தம்பியிடம் வந்திருக்கிறாள். 'பரீனா.. என்ன சொன்ன டொக்டர்...அக்ரமுக்கு என்னவாம் பிரச்சின...' என்று நலம் விசார்க்கிறாள் தாய் ஸதீகா. ' ஆ...நேத்து எப்பொய்ன்ட்மென்ட் போடனும் என்ட...அப்ப...அக்ரம் மச்சான்

டொக்டர் கிட்ட போனா...? என்று பைஸானும் கேட்க,' ஓ...உம்மா..அவரு வரல்ல அவருக்கு ஒன்டுமில்ல என்டு.. நானும் ஷாஹிதும் இழுத்துக் கொண்டு போன...என்னென்டு பார்க்கனுமே...' என்றாள் பரீனா. 'ஓ..போகனும் தானே ..மச்சானுக்கு என்ன..? ஹாட்ல ஏதும்...' என்று சொல்லி முடிக்கமுன், 'தம்பி,பாரு.. இவருக்கு ஹாட்ல ப்ளொக்காம்...அவசரமாக ஒபரேஷன் செய்யனுமாம்... நான் கவர்மென்ட்ல செய்யக் கேட்ட...அதுக்கு எப்பிடியும் ஆறு மாசத்துக்கு மேல எடுக்குமாம்..இவர்ட கண்டிஷன் வீக்ஆம்...ப்ரைவட்டா செய்யவன்டு தான் பார்க்குற...' என்றாள் பரீனா கவலையோடு. 'ப்ளொக்காமா...? என்று ஒரு கணம் உடைந்து போனாள் ஸதீகா. 'சரி...எனக்குத் தெரியும் அவருக்கு பெரிசா என்னமாலும் ஈக்கி என்டு.....மச்சான்ட பொடி நல்லா வீக்....அவசரமாக செய்யனும்...' என்றான் பைஸான்.ஸதீகாவும் ' எப்பிடி சரி சல்லிய கிட்டவாக்கி அவசரமாக பிரைவட்டாகவே செய்...' என்றாள் பதற்றமாக .'தம்பி ஒனக்கிட்ட சல்லி கேட்டுத்தான் வந்த... மச்சான்ட சைடால சல்லி ஸெட் பண்ணி தாரண்ட.... அது போதாவே...நானாவும் ரெண்டு லட்சம் மட்டும் எரேன்ஞ் பண்ணியன்ட....' என்று பரீனா தம்பியைப் பார்த்தாள். 'பரீனா அவசரமாக செய்தால் நல்லம் பின்னுக்கு போடாத...? என்று ஸதீகா சொல்லவும், 'இல்ல.. இல்ல... இது லேட் பண்ற விஷயமல்ல ....தாத்தா.. நீ...பயப்படாத ...என்னால முடிஞ்சத ட்ரை பண்றன்...' என்று பரீனாவை வழியனுப்பினான் பைஸான்.

'பாவம்டா அவள்... எப்பிடியாலும் சல்லிய..' என்று ஸதீகா பேசி முடிப்பதற்குள் 'ஒங்கள்ட்ட இருந்தா குடுங்க..ஈக்கும் தானே சேர்த்து வைத்த சல்லி....'என்று மகன் கிண்டலாக சொல்லி விட்டான்.பைஸான் பலவாறாக யோசிக்கி றான்.அவனிடம் உண்மையாக பணம் இல்லை. காரணம் அவனுடைய மனைவி மற்றும் இரு மகள்கள் இந்த வருடம் புனித மக்காவுக்கு ஹஜ் பயணம் செய்ய பதிவு செய்திருக்கிறார்கள். இதனால் பகுதி பணம் செலுத்தியும் மிகுதிப்பணம் கட்டணமாக செலுத்த வேண்டியுள்ளது.பைஸான் இரவு பகலாக யோசிக்கிறான் எவ்வாறு சிகிச்சைக்கான பணத்தை ஏற்பாடு செய்வதன்று.அவன் வாங்கிய சொத்துக்களை தன் மகள் இருவருக்குமே எழுதி விட்டான். அவனிடத்தில் பணம் எதிர்ப்பார்ப்பது நியாயமான ஒன்று. என்றாலும் இந்த சந்தர்ப்பத்தில் அவனால் பணம் கொடுக்க முடியவில்லை. இரண்டு நாட்களின் பின், 'ஷஸ்னா..நான் ஒரு முடிவெடுத்திருக்கிறேன்...அமைதியாக கேளுங்க...நான் இது நாலாவது தடவ



ஹஜ்ஜுக்குப் போப்போற....ஃபெஸ்ட் டைம் தனியாக, ஸெகன்ட் உம்மா வோட, தேர்ட் ஒங்களோட.... சரியே.. வெளங்கிச்சா. அதனால.. இந்த டைம் நான் போகல்ல...' என்றான் கணவன் பைஸான் கவலையோடு. 'நீங்க என்ன சொல்றீங்க...நீங்க தானே சொன்ன ஒங்கட ஹயாத்துக்குள்ளே பொம்புளப் புள்ள ரெண்டயும் ஹஜ்ஜுக்கு கூட்டிட்டு போகனும் என்டு. அவங்களுக்காகத் தானே இந்தப் பயணம் போறது... இல்லாட்டில் தேவல்லே...' என்றாள் மனைவி சற்று கோபமாக. 'நான் சொன்ன தான்..அக்ரம் மச்சான்ட ஒபரேஷனுக்கு நான் கட்டாயம் பணம் கொடுக்கவே வேணும்...நான் ஒங்கட நானாவோட பேசிட்ட அவரும் நல்ல விஷயம் நீங்க ஒங்கட மச்சானுக்கு சல்லிய குடுங்க.. அதுதான் ஒங்களுக்கு நல்லம்...ஷஸ்னாவயும் குட்டிகளையும் நான் பார்த்துக்கொள்றன். ஏன்ட வைஃபும் போறதானே என்டு சொல்லிட்டாரு.....' என்றான் உறுதியாக கணவன். 'ஒங்களுக்கு அவங்கள பார்க்கிறது வேலையாப் போயிட்டு... ஹஜ்ஜுக்குப் போறத பின்னுக்குத் தள்ளி போட்றா...ஒங்கட நானாவ போல ரெண்டு மூணு லட்சத்த குடுத்திட்டா வேல முடிஞ்சி....' என்றவாறே மனைவி ஷஸ்னா எரிச்சலா கிறாள். பைஸானுக்கும் நன்றாகத் தெரியும் மனைவி கோபப்படுவாள் என்று. பிள்ளைகளுக்கு பதினெட்டு வயது பூர்த்தியாகும் வரை காத்திருந்தார்கள் அவர்களை ஹஜ் யாத்திரைக்கு அழைத்துச் செல்வதற்காக. பைஸானும் மனைவியும் பெரும் எதிர்பார்ப்போடு இருந்த பயணம். மனைவி ஷஸ்னாவும் கொடுக்குற மனதைக் கொண்டவள் தான். இருந்தாலும் அவளுக்கு இதை ஜீரணிக்க முடியவில்லை. மாமியையும் எந்த குறையுமில்லாமல் கவனிக்கிறவள். அதைப்போன்று தான் அவனுடைய உடன் பிறந்தவர், உற்றார் உறவினர் என்று அனைவரையும் அன்போடு உபசரிக்கிறவள். பைஸான் கையடக்கத் தொலைபேசியை ஒலிபெருக்கி போட்டு சுழற்றுகிறான் 'அஸ்ஸலாமு அலைக்கும் ஹாஜியார்... நான் பைஸான்.. சின்னொரு ஹெல்ப் பண்ணனும்... ஏன்ட பேர்ல ஈக்கிற ஹஜ் ரெஜிஸ்டர கேன்சல் பண்ணுங்க.... மறுமுனையில் ஹாஜியாரும் 'ஏன் என்ன பிரச்சின பைஸான் ஹாஜி...நீங்க எல்லாரும் எப்பவோ ஓகே தானே...'

'ஓ..ஹாஜியார் ஏன்ட வைப் புள்ளக மத்தது எங்கட மச்சானும் வைபும் ஓகே... எங்கட தாத்தாட ஹஸ்பண்ட ஒபரேஷன் ஒன்டு ஈக்கி அதுக்கு அவசரமாக சல்லி தேவப் படுற ஹாஜி...அதுதான்... நான் பெய்த்தீக்கி தானே....அது மச்சானுக்கு ஹெல்ப்ஃபுல்லா ஈக்கும்...' என்றதற்கு மறுமுனையில் 'மாஷா அல்லாஹ் நல்ல விஷயம் பைஸான் ஹாஜி...நீங்க வெச்ச எண்ணம் நல்லதாக ஈக்கி...ஹஜ் செய்த நன்மை கெடைக்கும். இப்பிடி ஒதவுறதும் நற்பாக்கியம் தான்...நீங்க ஒபரேஷனுக்கு கொடுக்கிறது திருப்தியாக இருந்தால் நோ ப்ரொப்ளம்..எல்லாம் ஹைரா அமையும்.

வெயிட்டிங்ல ஈக்கிறவருக்கு ஒங்கட நம்பர குடுத்தால் சரி... இப்ப ஒங்களுக்கு ரெண்டு நன்மை பைஸான் ஹாஜி...' என்றவாறு கொஞ்சம் பேசிவிட்டு தொலைபேசியைத் துண்டிக் கிறான். இவை அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த ஷஸ்னா ஓரளவு சாந்த மாகிறாள். அவளின் முகத்தில் பிரகாசம் தெரிகிறது. தன் கணவன் நல்ல முடிவு தான் எடுத்திருக்கிறான். 'ஏய்...நீங்க ஹஜ்ஜுக்கு போற நன்மை கெடச்சிடும். நாங்க இன்ஷா அல்லாஹ் நானாவோட போறம்...' என்ற ஷஸ்னாவை நன்றி உணர்வோடு பார்க்கிறான் பைஸான். அவனும் மன நிறைவோடு வங்கியிலிருந்து பணத்தை எடுப்பதற்காக உடனே செல்கிறான்.

(முற்றும்)

# அகம்பாவம் கொள்ளாதீர்

( சிறுவர் பாடல்)



சிறியவர் என்று அலட்சியம் கொள்ளாதே!
பெரியவருக்கு உதவும் நாளும் வருமே



ஓரமாய் விளையாடி போகட்டும்
ஆனால் ஒதுக்கி வைக்காதீர்

சிங்கம் நான் என் அங்கம்
சிம்மாசனத்தில் தான்
என்று அகம்பாவம் வேண்டாமே!




உன் வலிமையும் தளரும்
எளிமையாய் நடந்திடுவீர்

எலி தான் இது இதற்கு புலியை பிடிக்க
வலிமை ஏதென்று எண்ணம் கொள்ளாதீர்

விழியால் பார்ப்பது எல்லாம் நிஜமாகாது
செவியால் கேட்பதெல்லாம் சரி என்றாகாது

அலசிப் பார்த்தால் புரியும் அது
ஆபத்தில் உதவும் உருவம் அது
அதனை உணர்ந்து அதற்கு உரிமை கொடுத்திடுவீர்



பெரியவர் சிறியவர் பாகு பாடு பார்க்காது நடந்திடுவீர்
இதை உணர்ந்தால் சிகரத்தை கடந்தது போல் உணர்வீர்

ராஜாதி ராஜனாக சிறுவர்களின் மனதில் நிலைத்திருப்பீர்

பானு ஜிப்ரி
சாய்ந்தமருது








ஆக்கம் :- **எம்.ஜே. ஜவ்சன் அஹமட்**
(மருதமுனையூரான்)
துணிந்தெழு சஞ்சிகை இணையாசிரியர்.

## நூல் விமர்சனம்

**நூல் :- அரளி விதை**
**ஆசிரியர் :- பர்ஹான் முஸ்தபா**
**வகை :- சிறுகதைகள்**
**வெளியீடு :- மூதூர் ஜே எம் ஐ பப்ளிகேஷன்**
**உரிமம் :- ஆசிரியருக்கு**
**ஆண்டு :- 2025 நவம்பர்**

பர்ஹான் முஸ்தபா எழுதிய ‘அரளி விதை’ எனும் நூல், சுமார் பதினொரு சிறுகதைகளைத் தொண்ணூற்று ஆறு பக்கங்களில் சுமந்து வந்துள்ளது. இக் கதைகளை வாசிக்கும்போது, ஒரு ஊரின் முகவரி என்ன என்பதையும், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைக்கோலம் எப்படியிருந்தது என்பதையும் இக்கதை கள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

ஒரு சமூகத்தின் பண்பாடு, கலாச் சாரம் மற்றும் பாரம்பரியத்தைத் தற்காலத் தலைமுறைக்கும் வருங்கால சந்ததியினருக்கும் ஒரு ஆவணமாகக் கையளிக்கும் நோக்கில் இந்நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது இதற்காக நூலாசிரியர் எடுத்துக்கொண்ட முயற்சி அளப்பரியது. ஐம்பது ஆண்டுகளைக் கடந்த ஒருவர் இந்நூலைப் படிக்கும் போது, அவரின் கடந்த காலம் கண்முன்னே நிழலாடிச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

இது ஒரு சிறுகதைத் தொகுப்பாக வெளிவந்திருந்தாலும், இதனை ஓர் ஆவணக் காப்பகப் பெட்டகமாகவே என்னால் பார்க்க முடிகிறது. கிழக்கு மாகாணத்தின் ‘முக வெற்றிலை’ எனப்படும் திருகோணமலை, மூதூர் பிரதேசத்தின் மண்வாசனையையும், அங்குள்ள தனித்துவமான பேச்சுவழக்கு மற்றும் சடங்கு சம்பிரதாயங்களையும் இந்நூல் முதன்மைப்படுத்துகிறது. மனித வாழ்வில் நிகழும் ஏற்ற இறக்கங்களுக்கும் இதில் தாராள இடமுண்டு.

முன்னோர்களின் சடங்குகளும் கலாச்சார விழுமியங்களும் காலவோட் டத்தில் புதையுண்டு போகாமல் பாதுகாக்கும் இம்முயற்சி போற்றத் தக்கது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்காலம் என்பது உலகில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்த பொற்காலம். அக்காலகட்டத்தைப் பல எழுத்தாளர்கள் பதிவு செய்திருந்தாலும், பல நுணுக்கமான விடயங்கள் விடுபட்டுப் போயுள்ளன. அந்தத் தவறைச் செய்யாமல், மண்ணின் பாரம்பரியத்தை இளைய தலைமுறைக்கு மிக லாவகமாக நூலாசிரியர் கடத்தி யிருக்கிறார்.

நூலாசிரியர் பர்ஹான் முஸ்தபா ஏற்கனவே ஒரு புனைவு நூலை வெளியிட்டுத் தேசிய அளவில் கவனம் பெற்றவர். இந்நூலைப் பொறுத்தவரையில், மூதூர் மண்ணின் புழுதி வாசமும் ஈரம் கலந்த காற்றும் வாசிப்பவர் சுவாசத்தைத் தட்டிப் பார்க்கின்றன இவரது இரு நூல்களையும் வாசித்தவன் என்ற வகையில், கதையின்

கருப்பொருளும் நகர்த்தப்படும் விதமும் வாசகர்களை அந்தந்தக் காலகட்டத்திற்கே அழைத்துச் செல்லும் யுக்தி கொண்டவை என அடையாளப்படுத்த முடிகிறது.

நூலாசிரியரின் உன்னிப்பான அவதானிப்பு ஊரின் பாதைகள், கல்யாண வீடுகள், கபுறுஸ்தலங்கள், நேர்ச்சைகள், கந்தூரி வைபவங்கள் எனப் பரந்து விரிந்து கிடக்கிறது. சண்டைகள், சமரசங்கள், சிரிப்புகள், அழுகைகள், மௌனங்கள் என வாழ்வின் சகல பக்கங்களையும் அவர் தொட்டுச் செல்கிறார்.

அறிவியல் வளர்ந்துவிட்ட இக்காலத்தில், கடந்த காலத்தைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்ட ஆட்கள் குறைவு. ஆனால், மூதூரின் கதையை இளைய தலைமுறை அறிந்துகொள்ள 'அரளி விதை' ஒரு சிறந்த சாட்சியாக அமையும்.

இக்கதைகளை வாசிக்க வேண்டும் என்பதை விட இக்கதைகளை உணர வேண்டும் என்பது நூலாசிரியரின் வேட்கையாக இருப்பதை நூலின் ஆரம்பத்திலேயே கண்டுகொள்ள முடிகிறது.

பின்னே வரும் கதைகளில் நான் உணர்ந்த சுவாசித்த சில குறியீடுகளை உங்களுக்காக ஓரக் குறிப்பாக எழுதி வைக்கிறேன் அதன் முடிவுகளில் என்ன சம்பவிக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்.

அரளி விதையை வாசிக்க, ஆராய்கின்றபோது ஏன்? எதற்கு? என்ற கேள்விகளை என்னை நோக்கி பலமுறை கேட்ட பிறகு சில எடுகோள்களை உருவாக்க முடிகிறது பெயரின் பின்புலத்தில் அரளி விதை மிகச்சிறியது, ஆனால் அதன் பாதிப்பு பெரியது அதுபோலவே, இக்கதைகள் மிகச் சுருக்கமாக இருந்தாலும், வாசித்து முடித்த பிறகு வாசகனின் மனதில் ஒருவிதமான அதிர்வையோ அல்லது நீண்ட காலத் தேடலையோ உருவாக்கும் வீரியமான மொழி உள்ளதால் நூலாசிரியர் இப்படி ஒரு தலைப்பை தேர்ந்திருக்கலாம்,

வெறும் பூக்களாக இல்லாமல், அதன் 'விதை'யைத் தலைப்பாகத் தேர்ந்தெடுத்திருப்பது, ஒரு செயலின் தொடக்கத்தையோ அல்லது ஒரு விளைவின் காரணத்தையோ எழுத்தாளர் ஆராய்கிறார் என்பதைக் காட்டுகிறது இது குறியீட்டு முறையில் சாத்தியமானது,

நூலின் பொருளடக்கத்தை கண்களைப் பிசைந்து கொண்டு உற்று நோக்குகிறபோது எங்கோ கேள்விப்பட்ட பெயர்களைப் போல சில தலைப்புகளை காண முடிகிறது

கரையோர பிரதேசங்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்ட சொற்பிரயோகங்களே இவைகள்.

சிறுவயதில்பாலும்பழமும், நேர்ச்சை, புகாரி கந்தூரி, மௌலிது, சைத்தான், ஒடுக்கத்துப் புதன், தலை பாத்திஹா, போன்ற சொற்பிரயோகங்களை எனது உம்மமாவின் வாயில் இருந்து அதிகமாக உச்சரிக்க கேட்டிருக்கிறேன் அப்போதெல்லாம் இவைகளை கிரகித்துக் கொள்ளுகின்ற பக்குவம் இருக்கவில்லை என்பதுதான் உண்மை.

அதிலும் சில சொற்கள் பிரதேச வழக்கு சொற்களாக இருப்பதால் அதை எனது பிரதேசத்தில் நான் கேள்விப்பட்ட நினைவுகள் இல்லை அப்படியாக கட்டு கல்யாணம், வெசக்கல், வெட்டு கல்யாணம் போன்றவைகளை புதிதாக இங்கு காண முடிகிறது.

அரளி விதைப் பயணத்தில் நான்

கடக்கும் முதல் படி ஒரு கிராமத்துச் சூழலில், சிறுவர்களின் விளையாட்டு களுடன் தொடங்குகிறது குறிப்பாக 'கையான்' (அரளி விதையைக் கொண்டு விளையாடப்படும் ஒரு வகை விளையாட்டு) விளையாடும் சிறுவர்களின் குதூகலம் விவரிக்கப்படுகிறது.

இந்தச் சூழலில், சாலியா என்ற பெண்மணி, தன் குழந்தையை இழந்த துயரத்தை நெஞ்சில் சுமந்து கொண்டிருக்கிறார். அந்தத் துயரத்தின் நினைவாக, அவர் 'ஆஷுரா' தினத்தில் குழந்தைகளுக்கு பாலும் பழமும் கலந்த பானத்தை வழங்குகிறார். இறுதியில், பசியோடு வரும் ஒரு சிறுவனுக்கு அந்தப் பானத்தைப் புகட்டி, அவன் சிரிப்பில் தன் குழந்தையின் சிரிப்பைக் காண்பதோடு அத்தியாயம் நிறைகிறது.

கதை சொல்லப்பட்ட விதம் மிகவும் மென்மையானது. ஒருபுறம் சிறுவர்களின் துள்ளலான விளையாட்டு, மறுபுறம் ஒரு தாயின் ஆழமான மௌனமான வலி என இரண்டையும் மிக அழகாக முரண்படுத்திக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

அரளி விதையை உடைத்து, உள்ளே ஈயத்தை உருக்கி ஊற்றி 'கையான்' தயாரிக்கும் முறை இன்று மறைந்து வரும் ஒரு கலை. அதை மிகத் துல்லியமாக ஆவணப்படுத்தியிருப்பது சிறப்பு.

தன் சோகத்திலும் பிற குழந்தைகளை மகிழ்விக்க வேண்டும் என்ற எண்ணமும், மதச் சடங்குகளை மனிதாபிமானத்தோடு இணைத்திருப்பதும் (பாலும் பழமும் தானம்) நெகிழ்ச்சியைத் தருகிறது.

'கணவன் மொஹைதீன் காக்கா சாலியாவிற்கு ஆறுதல் சொல்லும் விதம் முதிர்ச்சியான அன்பை வெளிப் படுத்துகிறது.

இந்தக் கதையில் சாலியாவின் துயரத்தை ஆசிரியர் பல இடங்களில் நேரடி யாகவே சொல்லிவிடுகிறார்.

உதாரணமாக:

'ஆனால் அந்தப் புன்னகைக்குள்ளே புதைந்து கிடக்கும் துயரத்தை யாராலும் புரிந்துகொள்ள முடியாது.'

இந்த வரியை நேரடியாகச் சொல்வ தற்குப் பதிலாக, அவர் செய்யும் செயல் கள் அல்லது அவர் முகத்தில் மின்னும் ஒரு சிறு அசைவின் மூலம் அந்தத் துயரத்தை வாசகர்களே உணரும்படி காட்டியிருந்தால் இன்னும் ஆழமாக இருந்திருக்கும்.

இப்படியே ஒவ்வொரு கதைகளையும் ஆழ அகலமாக ஆராய முடிகிறது ஆனாலும் கட்டுரையின் நீளத்தை கருத்தில் கொண்டு பொதுவான சில ஏற்ற இறக்கங்களை சிலாகிக்கலாம்.

பொதுவாகவே எல்லா கதைகளும் பிரதேச வழக்கு சொற்களை உடைய சம்பாசணைகள் நிறைந்தவையாக காணப் படுகின்றன,

கரையோர வாழ் மக்களின் வாழ்வி யலை சொல்லுகின்ற கதாபாத்திரங் களையும் அவர்களின் பேச்சு வழக்கில் உள்ள நளினத்தையும் சித்தரித்துக் காட்டு கிறது,

கரையோர வாழ் மக்களிடையே பேசுகின்ற எழுதுகின்ற தமிழ் மொழி நடைகளில் கணிசமான அளவு சொற் பிரயோகங்கள் வேறு மொழிகள் சார்ந்த வையாகவும் அதிலும் குறிப்பாக அரபு மொழியில் உள்ள சொற்களை இவர்கள் அதிகம் பயன்படுத்துவதையும் சாட்சி பகர்வதாக இக்கதைகள் அமைகின்றன,

கரையோரத்தில் அரேபியர்களின் வருகையும் அதன் மூலமாக இஸ்லாமிய மதம் பரவுவதற்கு ஏதுவாக இருந்த செயற்பாடுகளும் இதன் ஊடாக நிறுவப் படுகிறது அக்கலாச்சாரங்கள் இன்று வரை மத அனுஷ்டானங்களாக நீடித்திருப் பதையும் சில நேரங்களில் அவை மதம் கடந்த வெறும் போக்கு சிந்தனை என்ற கட்டுக்கோப்புகளையும் சொந்தம் ஆக்கிக் கொள்கிறது.

அதிலும் இங்கு பயன்படுத்தியிருக்க கூடிய எல்லா சொற்களும் குறித்த இனத்திற்கு மட்டும் குறிப்பானவையா கவும் அவைகளை மக்கள் மிக பக்தியோடு செய்து வருகின்ற நிலையையும் காண முடிகிறது இதனால் பண்பாடு கலாச்சாரம் என்பதை கடந்து மத அனுஷ்டானமாக இருப்பதை காணலாம்,

நூலாசிரியர் இங்கு தெரிவு செய்தி ருக்கும் அத்தனை செயற்பாடுகளும் பின்னொரு காலத்தில் மருகி இருப்ப தையும் அதற்கான மத நேர் முரண் விவாதங்கள் நடப்பதையும் காணலாம் ஆனாலும் தவிர்க்க முடியாமல் சில இடங்களில் அவைகளுக்கான அங்கீகாரம் இருப்பதை நடத்தை ரீதியாக எடுத்துக் கொள்ள முடிகிறது,

அத்தோடு நூலாசிரியர் இங்கு பயன் படுத்துகின்ற அத்தனை சொற்றொடர் களும் உண்மையாகவே பேசுகின்ற சம்பாஷணைகள் என்பதை கடந்து எழுத்து வழக்கில் எழுதப்பட்டிருப்பது பேச்சு வழக்கில் தொய்வு நிலையை உண்டாக்குகிறது,

உரையாடல்களில் செயற்கை தன்மை ஒன்றை வாசகராக என்னால் உணர முடிகிறது கணவன் மனைவி சம்பாச ணையில் இது முதல் இருந்தே தொடங்கி முடிவு வரை ஆங்காங்கே காட்சி தருவதை அவதானிக்கலாம்,

நூலாசிரியர் இங்கு பல கதைகளில் சம்பாசணைகளை மறைத்து வைத்து ஏக்கத்தோடு கொடுக்காமல் எல்லா விடயங் களையும் நேரடியாகவே சொல்லி யிருப்பார் இதனால் கதை மீதான எதிர் பார்ப்பு மனதில் குறைந்து செல்கிறது,

பல கதைகளை நூலாசிரியர் சற்று வேகமாகவே சொல்லி முடிக்கிறார் கதையின் மையக் கருத்துக்கு செல்வதற்கு மிக நீண்ட நேரத்தை தனது ஆக்கிக் கொள்ளும் எழுத்தாளர் இன்னும் வேகமாகவும் இன்னும் சுருக்கமாகவும் தமது கதைக்கான நேரத்தை எடுத்துக் கொள்ளலாம்.

ஆகவே ஒரு வாசகனாக என்னால் இந்நூலில் இருந்து பல்வேறு எடுகோல் களை எடுக்க முடிந்தது நீங்களும் கட்டாயமாக இந்த புத்தகத்தை வாசிக்க வேண்டும் ஒரு சமூகத்தின் கட்டுமானங்களை அறிந்து கொள்ள வேண்டும் ஒரு பிரதேசத்தின் அழிந்து போன கொள்கைகளையும் கோட் பாடுகளையும் மறைந்து போன மத நம்பிக்கைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும் கடந்த காலம் இது தான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

நிச்சயமாக இந்த நூல் எல்லோர் கவனத்தையும் ஈர்க்கும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை அதுபோல இளையோர் மனதில் குடிகொள்ளும் என்பதிலும் வேறு கருத்துக்கள் இல்லை நூலாசிரியர் இன்னும் பல நூல்களை தர வேண்டும் என்ற பிரார்த்தனையோடும், அவாவோடும் நிறைவின் இறுதிப் புள்ளியில் சங்கமிக்கிறேன்.



# பொதிகளில் / சாடிகளில் பயிர்ச் செய்கை
# Potted Culture

சாடிகளில் / பொதிகளில் நாற்றுகளை நடுகை செய்தல் பொதிப் பயிர்ச் செய்கை/சாடிப் பயிர்ச் செய்கை/தொட்டிகளில் பயிர்ச் செய்கை என அழைக்கப்படும்.

இது பொதுவாக நிலப் பற்றாக் குறையான பகுதிகள், நீரில் மூழ்குகின்ற/வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்ற பகுதிகள்,தண்ணீர் இல்லாத பிரதேசங்கள்,மணல் பாங்கான தரைகளை உடைய பகுதிகள், நகர் புறங்கள், மொட்டை மாடிகள் மற்றும் நில அலங்கார தேவைகளுக்காக இயற்கையான/செயற்கையான பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு பொருத்தமான முறையாகும்.

இதற்காக ஒரளவு கனமான பொலித்தீன் பைகளாலான கறுப்பு வெள்ளை நிற/கறுப்பு நிற வளர்ப்புப் பைகள் (Grow bags), பொலிசெக் பைகள், அரிசி பைகள், பால் மா பக்கட்டுகள் (01kg - பைகள் மரக்கறி பயிர்களுக்கு போதுமானதாகும்), பழைய டெனிம் கால்சட்டைகள், PVC குழாய்கள், தெம்பிலி மட்டைகள், தயிர் சட்டிகள் (மண், பிளாஸ்டிக்), யோகட் கப்கள், சிரட்டைகள், மரப் பலகைகள் ,பழைய ஓடுகள், தென்னம் அடி மட்டைகள் ,சாடிகள்(சீமெந்து/மண்/பிளாஸ்டிக்) என பலதையும் அந்தந்த தாவர இனத்திற்கு ஏற்ப ஆக்க பூர்வமாக அமைத்து பயன்படுத்தலாம்.

பொதிகளை தயார் செய்யும் போது நீர் வடிந்தோடக் கூடியவாறு பொதிகளில்/சாடிகளில் தேவைக்கு ஏற்ப துளைகளை இடுதல் அவசியமாகும்.இதனால் நீர் தேங்கி நிற்பதனால் ஏற்படும் பங்கசு நோய்கள் தவிர்க்கப்படுவதோடு தாவர வேர்களின் சுவாசத்திற்கும் உதவுவதோடு நாற்றின்/தாவரத்தின் வளர்ச்சிக்கும் உதவும்.

**நடுகை ஊடகத்தை தயார் செய்தல்:**

மேல் மண் : கூட்டெரு /மாட்டெரு என்பனவற்றை 1:1 எனும் அளவில் எடுத்து நன்கு கலந்து நடுகை ஊடகம் தயார் செய்யப்பட்டு சாடிகள்/பொதிகளில் 2/3 பகுதிக்கு நிரப்பப்படும்.இதன் போது மாட்டெரு நன்கு காய்ந்ததாக(1/2 இன்ச் அளவு பரப்பி காயவைத்து எடுக்கப்படல் வேண்டும்)/நன்கு உக்கியதாக இருத்தல் வேண்டும்.மாட்டெரு நன்கு காயாமல் பயன்படுத்தும் போது மாட்டெரு பிரிகை அடைவதனால் வெளிவிடப்படும் வெப்பம் காரணமாக தாவர வேர்கள் பாதிக்கப்படும்.இதனை தவிர்ப்பதற்காகவே நன்கு காய்ந்த சாணம்/மாட்டெரு பயிர்ச் செய்கையில் பயன்படுத்தப்படுகிறது.

**பொதிகளை தயார் செய்தல்:**

- பொலித்தீன் பைகளை பயன்படுத்தும் போது கறுப்பு - வெள்ளை பொலித்தீன்

பயன்படுத்துவது சிறந்ததாகும்.

- பைகளை பயன்படுத்தும் போது அடிப்பகுதி மூலை உள்பக்கமாக மடிக்கப்படல் வேண்டும்.
- பையில் துளையிடப்பட வேண்டும்.
- நடுகை ஊடகத்தினால் மூன்றில் இரண்டு பகுதியை நிரப்புதல்.
- பையின் மேற்பகுதியை மடித்தல்.
- பொதியை நிரப்பி ஒரு வாரத்தின் பின்னர் நாற்றை/தாவரத்தை நடுவது சிறந்தது.

**சாடிகளை தயார் செய்தல்:**

தயாரிக்கப்பட்ட ஊடகத்தினால் 2/3 பகுதிகளை நிரப்புதல் வேண்டும்.

**நடுகை :**

- நாற்று விதைகளை முளைக்க வைத்து /நேரடியாக பொதிகளின்/சாடிகளின் மத்தியில் ஒரு விதையை/தாவரத்தை நடுகை செய்ய வேண்டும்.
- பின்னர் தாவரத்திற்கு போதியளவு சூரிய ஒளி கிடைக்கக் கூடியவாறான இடத்தில் வைத்து அளவான நீர், சிபாரிசு செய்யப்பட்ட பசளைகளை இட்டு பராமரித்தல் வேண்டும்.

இதற்கான நோய்,பீடைகளை கட்டுப்படுத்த இயற்கை நோய்,பீடைநாசினிகளை அந்தந்த பிரதேசத்திற்கான விவசாய போதனாசிரியர்களை அணுகி அவர்களின் ஆலோசனைகளை பெற்று எமது வீடுகளில் நாமே தயாரித்து பயன்படுத்தலாம்.

**பொதிப் பயிர்ச் செய்கையின் முக்கியத்துவம்.**

- நீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும்.
- அதிக வரட்சியான காலங்களிலும் குறைந்தளவு
- நீரைப் பயன்படுத்தி செய்கை பண்ணலாம்.
- இடவசதி குறைந்த இடங்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம்.
- பராமரிப்பு இலகுவாகும்.


இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சிறந்த விளைச்சலை எமது பொதிப் பயிர்ச் செய்கை மூலம் பெறலாம்.

ஆக்கம்:

மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்
விவசாய போதனாசிரியர் - ஏறாவூர்
சம்மாந்துறை, இலங்கை.



# குப்பை



டாக்டர் அமுதாதேவி

வீடு முழுக்க எப்ப பார்த்தாலும் குப்பையைப் போட்டு வைப்பா... கேட்டா நோட்டுக்கு அட்டை போட்டேன்மா... பென்சில் சீவின... பேனாவுக்கு இங்கு ஊத்தின... பாட்டில் காலி ஆயிடுச்சு... தப்பா எழுதிட்டேன் அதனால நோட்ல அந்த பக்கத்தை கிழிச்சுட்டேன் என்று தான் குப்பை போட்டதற்குக் காரணம் சொல்லுவாள். பள்ளிக்கூடம் முடிந்து வரும் பொழுது அவ்வப்பொழுது வாங்கித் தரும் தின்பண்டக் கவர்கள் வேறு வீட்டுக்குள் அங்கும் இங்கும் ஆக இறைந்து கிடக்கும்.

சீவி. சீவி சிறியதாக மாறிப்போன பென்சில்களும் இன்னும் கொஞ்சம் முயன்றால் நான் வண்ணம் தருவேன் என்பது போல உருவத்தில் குறுகி காணப்படும். வண்ணப் பென்சில்களும் அனேகம் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும். விடுமுறை காலத்தில் தன்வியிடம் பலமுறை சொல்லியது உண்டு. உன் புத்தகப் பை, புத்தக அலமாரியை தூய்மைப்படுத்து என்று. அவளது துணி வைக்கும் அலமாரி எப்பொழுதும் அலங்கோலமாகவே கிடக்கும். தினமும் பயன்படுத்தும் துணிகளை மடித்து சிதறாமல் வைத்தால் என்ன... காலையில் பள்ளி செல்லும் அவசரத்தில் சாக்ஸ், சிம்மீஸ் உள்ளிட்ட பொருட்களும் உள்ளாடைகளும் அங்கங்கு கலைந்தபடியே கிடைக்கும். வீட்டிற்குத் திரும்பிய பின்பாவது கலைந்த பொருட்களை சரி செய் என்று சொன்னால் போம்மா வீட்டுப்பாடம் வேற எழுதணும் என்று சடைந்து கொள்வாள். பள்ளிக்கூடம் போற வழி தானே பாப்பா குப்பை கவரை தரேன் கொஞ்சம் வச்சிட்டு போறியா என்று கேட்டால் ஏம்மா பள்ளிக்கூடம் போகும்பொழுது யாராவது இப்படி எடுத்துட்டு போவாங்களா? என்று கேள்வி கேட்டு மறுத்து விடுவாள்.

சமையலறையில் அன்றைய தினம் உணவுக்குப் பயன்படுத்திய வெங்காயம், பூண்டு ஆகியவற்றின் காய்ந்த சருகுகளும் அழுகிய அதன் பகுதிகளையும் காய்கறிகளின் மீதமான வீணான பாகங்களையும் மீந்து போன உணவுகள், சமையலுக்குப் பயன்படுத்தும் பொடிகளின் கவர்கள் பால், தயிர் வாங்கிய கவர், கடையில் முன்தினம் வாங்கிய தின்பண்டத்தின் காலியான கவர், என சமையலறையில் முழுவதும் நிறைந்து இருக்கும். பல நேரம் காலியான பெருங்காய டப்பா எண்ணெய் கவர்கள், சோப்புக் கவர்கள், ஷாம்பூ, காலியான பற்பசை கழிவறை கழுவும் லிக்விட்,

மருந்து காலியான டப்பா என அனைத்தும் ஒரே கவரில் தஞ்சம் அடைந்திருக்கும்.

மாதாந்திர சேமிப்பான பாவித்த நாப்கின்களும் தவறாமல் குப்பை கவரில் இடம்பெற்று விடுகிறது. இதுபோக தினமும் வீடு கூட்டும் பொழுது வரும் மண் இவையும் அதில் அடங்கும். குளியல் அறையில் அவ்வப்பொழுது படியும் கூந்தல் கழிவு, செய்தித்தாளில் சேர்த்து மடித்து குப்பைகளில் இடம்பெற்று விடுகிறது.

நியாய விலைக் கடைகளில் வாங்கும் அரிசி, கோதுமை, பருப்பினை தூய்மை செய்யும் பொழுது அதன் கழிவுகளும் குப்பையில் அழையா விருந்தாளியாக இடம் பெற்று விடுகிறது. எப்படியோ மொத்தமாக ஒரே கவரில் கட்டி அலுவலகம் போகும் வழியில் உள்ள குப்பைக் கிடங்கில் போகும் பொழுது வீசிவிட்டு செல்வதுதான் பார்வதியின் வழக்கமான பணிகளில் ஒன்று.

சில நேரம் எடுத்துச் செல்ல நேரம் இல்லாமல் இருக்கும்பொழுது துர்வாடை அடித்து இரண்டு மூன்று நாட்கள் கவரிலேயே வெளியில் கிடக்கும். அதை வேறு கவருக்கு மாற்றும் பொழுது வெள்ளை நிறத்தில் புழுக்கள் நெளிந்து செல்லும். அதைக் கண்டு முகத்தைச் சுளித்தபடியே அடியில் ஒழுகியிருக்கும் நீரைத்துடைத்து விட்டு வேறு புதிய கவரில் போட்டு ஒரு வழியாக இடம் மாற்றினால் தான் நிம்மதியே வரும் அவளுக்கு.

தினமும் குப்பை வைக்காத நாட்களில் அந்த குப்பைக் கிடங்கு உள்ள இடத்தைக் கடந்து செல்லும் பொழுது தூய்மைப் பணியாளர்கள் தினமும் மக்கள் இப்படி வைத்துச் செல்லும் விதவிதமான குப்பைக் கவர்களைப் பிரித்து பச்சை, நீளம் என வேறுபட்ட நிறத்தில் உள்ள குப்பை தொட்டியில் தரம் பிரித்துப் போட்டுக் கொண்டிருந்தனர். எந்தவிதமான முகச்சுளிப்பும் இல்லாமல் தன் வேலையில் முனைப்பு காட்டும் அவர்களைப் பார்க்கும் பொழுது மனம் கொஞ்சம் வலிக்கத்தான் செய்தது. பல நேரம் சிதறிய கண்ணாடிக் குவளைகளைக் கவரில் அப்படியே போடும்பொழுது தூய்மை பணியாளர்களின் கையை அது பதம் பார்த்து விடுகிறது. தவறு என்று தெரிந்தும் நாம் செய்யும் துணிச்சலான செயல் எப்படி முகம் தெரியாத ஒருவரின் வாழ்வில் துன்பத்தை ஏற்படுத்தி விடுகிறது என்று மனம் வருந்தி புலம்பியப்படியே வந்தாள்.

ஒருவேளை மேலை நாடுகளில் உள்ளது போல நாம் நம் குப்பையை தரம் பிரிக்காமல் வைக்கும் பொழுது ஏற்றுக்கொள்ளாமல் அப்படியே நம் வீட்டின் முன்பாக திரும்ப வைத்துவிட்டுச் சென்றுவிடுவார்கள். அந்த நிலை நமக்கும் ஏற்பட்டால் என்னவாகும் என்று யோசித்தப்படியே வந்தாள்.

அடுத்த நாள் முதல் அவளது வீட்டின் குப்பைகளைத் தரம் பிரித்து வைக்க தன் குழந்தைக்கும் கற்றுக் கொடுத்தாள். இங்கு மாற்றம் என்பது நம்மிடம் இருந்து துவங்கினால் நலம் பயக்கும் என்று நினைத்தவாறு நிறைவான மனதோடு இருந்தாள். யாரோ ஒருவர் நமக்காக நம் ஆரோக்கியம் காக்க தன்னைப் பணயம் வைக்கும் பொழுது நாம் நம்மில் சிறிய மாற்றம் செய்தால் என்ன என்று மனம் மாறினாள்.

# எது கஞ்சத்தனம்?

சிலரை மட்டும் கஞ்சர்களாக இவ்வுலகம் பட்டியல் போட்டிருக்கிறதோ என்னவோ தெரியவில்லை அடிக்கடி சிலரின் புலம்பல்கள் என் செவிப்பறையில் ஒலிக்க அவர்களின் புலம்பல்களுக்கு முற்றுப்புள்ளியிட்டு சிந்தனைகளை கிளறி காற்புள்ளி போட்டுவிட்டுவோம் என்பதற்காக என் பேனாவிற்கு வேலை கொடுத்துவிட்டேன்.

பல லட்சங்களை பீரோவிற்குள் பூட்டிவைத்துவிட்டு என்னிடம் பணம் இல்லை என வாசல் கதவுகளை மூடுபவன் முதல் கஞ்சனாம்.

வண்ண வண்ண ஆடைகளை வரிசைப்படி அடுக்கி வைத்துவிட்டு கந்தல் ஆடையுடன் வறியவன் கதவு தட்டு கையில் வந்தவனை வெறும் கையுடன் வெளியேற்றுபவன் இரண்டாம் கஞ்சனாம்.

அறுசுவை உணவுகளை குளிர்சாதனப் பெட்டிக்குள் அடைத்து வைத்துவிட்டு வயிற்றுப் பசிக்காய் யாசகம் கேட்பவனை ஒன்றுமில்லை என்ற ஒற்றை வார்த்தையால் கடிந்து கொள்பவன் மூன்றாம் கஞ்சனாம்.

இப்படி பல வர்க்கங்களாக கஞ்சனின் பட்டியலை அடுக்கிக் கொண்டே இதோடு சேர்த்து ஒரு வசனத்தை கோர்த்து கொண்டதுதான் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இவையனைத்தும் பணம், பொருள், வசதி) என்னிடமிருந்திருப்பின் இவர்களை போன்ற கஞ்சனாக நான் இருந்திருக்க மாட்டேன்‘

உண்மைதான்

இவர்களின் கருத்தை நான் இங்கு வாதிடவும்மில்லை பிழை காணவுமில்லை.

இறைவரி கூறுவது போல ‘உண்மையில் மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான்.‘ தனக்கு கிடைத்திருக்கும் அருள்களை பிறருக்கு பகிர்ந்தளிக்காமலே உலகப் பயணத்தை முடித்துவிடுகின்றான். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் தன்னிடம் இல்லாதது அடுத்தவனுக்கு கிடைத்திருந்தால் அது என்னிடம் இருந்திருந்தால் அப்படி செய்திருப்பேன் இப்படி செய்திருப்பேன் என பகட்டுக் காட்டியே பாதி வாழ்க்கையை வீணடித்துவிடுகின்றான்.

கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்

ஆறுதல் அளிக்க அழகிய வார்த்தைகள் உன் அகராதியில் இருக்க, இதயம் சுக்குநூறாகி மொத்த நம்பிக்கையும் சரிந்து செய்வதறியாது சோர்விழந்து இருப்பவனுக்கு உன் வார்த்தைகளால் தைரியமூட்டியதுண்டா?

அப்படி செய்திருக்கவில்லையா? அப்படி யென்றால் நீதான் முதல் கஞ்சன்.

பல மணிநேரங்கள் உன்னிடம் இருக்கையில் உன் குழந்தைகளுக்கு, நேசத்திற்குரிவர்களுக்கு, குடும்பத்திற்கென அன்பை பகிர்ந்து கொள்ள நேரத்தில் அரைவாசியாவது கொடுத்ததுண்டா?

அப்படி இல்லையா அருட்கொடைகளை பகிர்ந்தளிக்காத நீயே மகா கஞ்சன்.

அறிவு எனும் பரிசு உனக்கு கிடைத்திருந்து அதை சமூகம் பயனடையும் விதத்தில் அவ்வறிவை எத்திவைத்ததுண்டா?

திறமைகள் பல உனக்குள் கொட்டிக் கிடக்கையில் அதை தனக்குள் பூட்டி வைத்துகொண்டிருக்கும் நீயும் கஞ்சனே!

வாடி வதங்கி போயிருக்கும் உம் சகோதரரின் முகத்தை புன்னகையால் நிரப்பிட வழியிருந்தும் அதை நிரப்பாது முகத்தை திருப்பிக் கொண்டால் நீயும் கஞ்சன்தான்.

உனக்கு தெரிந்த ஒன்றை அடுத்தவனுக்கு சொல்லி கொடுக்காமல் உள்ளத்தில் மறைத்து வைத்திருக்கும் நீயும் கஞ்சனே!

ஒன்றை விளங்கிக்கொள்ளுங்கள் ,எம்மிடமிருக்கும் நல்ல ஒன்றை பிறருக்கு கொடுக்காமல் இருப்பதுதான் கஞ்சத்தனம். அது பணத்துடன் மட்டும் சுருங்கி விடாது.

பண்பாடுகள் தொட்டு பாசம் வரை அதன் பட்டியல் நீண்டுக்கொண்டே செல்லும்.

உன் உலகப் பயணம் முடிய முன்
உன்னிடம் உள்ளவற்றை பதுக்காமல்,
பகிர்ந்தளித்துவிட்டுச் செல்.

**அம்னா ஸைனப் ரிஸாத்.**
புத்தளம்-

# அன்னை என் தெய்வம்

பத்துத் திங்கள் பத்திரமாய்
கருவேந்தினாள்
பதறும் மனமும், படபடக்கும் உடலும்
பசித்தாலும் பிடித்ததை உண்ண
முடியாத சோகம்
படைத்தவன் தந்திட்ட பரிசை பத்திரமாய்
மடியேந்தும் போராட்டம்

பாரமான சுமை கூட
சுகமாய் சுமந்திட்டாள்
பயத்தையும்,பதற்றத்தையும்
ஒருசேர மனதில் புதைத்து
தன்னுயிர் நிறுத்தி, மறு உயிரை
உலகிற்கு அழைத்து வரும் தெய்வமே!

உன்னைப் போல் உன்னத பிறவியை
இப் பூமிக்கு தராவிடில் இவ்வுலகே
சூனியமாய் மாறியிருக்கும்

உயிர் துடிக்கும் வேதனையைத் தாங்கியே
உலகிற்கு ஓர் உயிரை அழைத்து வந்து
மறு பிறவி பெற்றாயே!

நீ பட்ட வேதனை எல்லாம் உன் பிஞ்சு
மகவின் முகம் காண மறைந்தே போக

முதலும் முடிவுமாய் நீ அடைந்த
அளவற்ற மகிழ்ச்சி உன் பாலகன் பிறந்து
அழுத அந்தத் தருணம்

இறைவனுக்கு நிகர் யாரென்றால் நான்
துணிந்து சொல்வேன் அன்னை என்று
அவள் மற்றுமோர் தெய்வம் தான்



திருகோணமலை
**சரண்யா யூட் சுதர்ஷன்.**

# யாகாவாராயினும் நா காக்க

விழிநீர் வற்றிய வேதனை விளிம்பில்
வழிவகையறியா கானகத்துள்ளே
இணையதை இழந்த உறவினள் ஒருத்தி
தவித்தாள் துடித்தாள் பயந்தாள் மனம் பதைத்தாள்

பாருக்கு இணையாக அவள் பார்வைக்கு நிகராக
உடனிருந்த பரஞ்ஜோதி அதன் ஜோதி நீங்கிவிட

இருளுக்குள் கதறுகிறாள் பேரிடருக்குள் மூழ்குகிறாள்
தேற்ற ஓர் ஆளில்லை சாய ஒரு தோளில்லை
உறவுகள் பலவிருந்தும் ஒற்றையிலே தனித்திருந்தாள்

நான்கெழுத்து இதயமது அதற்கு மேல் துடிக்கவில்லை
உலகறிந்த மூன்றெழுத்தில் அவள் கணவன் இறக்கவில்லை.

இதையறிந்த பின்னாலும்,அங்கு வர யாருமில்லை.
வந்து செல்லும் ஒரு சிலரும் ஆறுதலாய் பேசவில்லை.
பரிதவிக்கும் தங்கையவள் எதை நினைத்து அழுதாளோ?

ஆறறிவில் ஓரறிவை. கொரோனா விழுங்கிவிட
ஐந்தறிவு ஜீவன்களாய் உறவில் சில மாறிவிட
மூடிய கதவின் பின் மறைந்திருக்கும் மானுடமே
நீ மூடியது கதவை மட்டுமல்ல உன் மனச் சாட்சியையும் தான்.

மூடிய கதவுகளை கொரோனா தட்டவில்லை
மூடிய விழியதனை காலனும் திறக்கவில்லை
இடம்பொருள் பாராது உமிழும் வார்த்தைகளை
உடனிருந்து கேட்டிருப்பான் தருணம் வரை காத்திருப்பான்

உயிருக்கு உயிரான உயிரைப் பிரிந்தவளின் உள்ளத்தின்
இல்லத்தை வெறுமையது சூழ்ந்து வர.
அமிலத்தை உமிழ்வதுபோல் வார்த்தைகளைக் கொட்டுகிறீர்

செத்தவீடென்றீர் இறைச்சிக்கறியென்றீர்.
வீட்டில் சமைத்த கறி போயுண்ண வேண்டுமென்றீர்
திருமணப் பேச்சுக்களை அவள் காதறியப் பேசுகிறீர்
புலம் பெயர்ந்து வந்ததனால் நாகரீகம் மறந்தீரோ?

உமிழ்நீர் சொரிவது போல் உமிழும் வார்த்தைகளை
கேட்டு மனம் நொந்த பின்னும் ஜடமாயிருக்கின்றாள்
கணவன் மனமறிந்து சபிக்க மறுக்கின்றாள்
கொண்டவன் குணமறிந்து கோபிக்க மறுக்கின்றாள்

தங்கையே புரிந்துகொள் இனிவரும் காலம் உன்னைத்
தூற்றுவதற்காய் தன்னைத் தயார்படுத்தும்
உனது ஒவ்வொரு நகர்விலும் ஒரு நூறு தவறு காணும்
பொட்டிலும் பூவிலும் அணியும் ஆடையிலும்.
சிரிப்பிலும் நகைப்பிலும் கூட, மங்கலத்துள்
அமங்கலத்தை தேடியொரு சாக்கடைக்குள்
முக்குளித்து முத்தமிட்டு முகத்தருகே கொப்பளிக்கும்

எதற்கும் கலங்காதே. உன்னவன் ஆத்மா
தீயவற்றை இனம்காட்டி உனையென்றும்
வழிநடத்தும். என்றென்றும் விழித்திரு!

உற்ற உறவே! சுற்றமே! உடன்பிறப்பே! நட்பே!
நல்மனமே! நம்முடன் இருப்போரே!
வலியெடுக்கும் வார்த்தைகளை வலுவிழந்த நெஞ்சத்துள்
நரம்பில்லா நாக்கின்பால் நாணேற்றி எய்யாதீர்.
யாகாவாராயினும் நா காக்க!



**அயலவன்.**
இலண்டன்






**நெல்லை. G. சோமசுந்தரி,** சென்னை- 122.
(கவிஞர், எழுத்தாளர், தொல்லியல் ஆர்வலர்)

வாழ்வின் பெரு நம்பிக்கை என்பது "அன்பு" எனும் ஜீவசக்தியில் ஒளிர்கிறது. இளவேனிற் காலத்தில், சாலையின் வழியே, நாம் பயணிக்கும் போது அதன் பாதையின் ஓரங்களில் காய்ந்து போன கிளைகளில் இலைகள் உதிர்ந்து, தங்கம் போன்ற பொன் மஞ்சள் மலர்கள் பொன்னிறமாகக் கொன்றை மரம் முழுவதும் சரம் சரமாகப் பூத்துத் தொங்குவதை அனைவரும் பார்த்திருப்போம். இதனையே "பொன்னென மலர்ந்த கொன்றை" (ஐங்குறுநூறு 420) என்று ,சங்க இலக்கிய வரி ஒரு இடத்தில் குறிப்பிடுகிறது. சித்திரை மாதத்தில் பெய்யும் சிறு மழைக்கும், ஆடியில் வீசும் பெருங்காற்றுக்கும் இடையில் நல்ல மணம் தருகின்ற இப்பருவ கால சொர்ண பூவை இலக்கியங்கள் பல பாடி யுள்ளன. இதைப் போலவே மாமரங்களும் செப்பு நிற இளந்தளிருடன் சட்டென்று பூக்களாக அவ்வேனிற் காலத்தில் பூத்துக் குலுங்குவதை நாம் கவனித்திருப்போம்.

வருடத்தின் அந்த இரண்டு மாதங் களில், எவ்விடத்திலிருந்தாலும் கோடை யைப் பூத்து வரவேற்கும் இந்த மரங் களின் பூக்கள் ஒன்றுக்கொன்று ஏதாவது பாஷைகளோ, செய்தி பரிமாற்றமோ நடத்துகின்றதா என்பதை என்றைக்காவது நாம் எண்ணிப் பார்த்ததுண்டா?

எந்த இடத்திலிருந்தாலும் யாரும் சொல்லாமலேயே அதன் பருவ கால நிலை யில் பூக்கும் இத்தாவரங்கள் வருடந்தோறும் தங்களின் சுழற்சியைச் செய்வதற்கு மறப்ப தில்லை. தாவரங்களுக்குள் ஒரு தகவல் பரிமாற்றம் உள்ளதோ, இல்லையோ, ஒரு விதமான காலப்பிரமாணமும் பருவகாலத்தில் அதற்குரிய உணர்வும் அவைகளுக்கு நிச்சயம் இருக்க வேண்டும். தினமும் பூக்கும் ஒரு பூவை விட அற்புதமான அதிசயமோ, நம்மைச் சுற்றி மௌனமாய் பிரதிபலிக்கும் இயற்கையின் பசுமையை விட முக்கியமான வேறு ஒன்றோ இவ்வுலகில் இருப்பதாகத் தெரியவில்லை.

உள் உணர்வின் அடிப்படையான சக்திதான் எதனையும் இயக்குவதிலும், செயல் படுத்துவதிலும் புதிய படைப்பூக்கம் வெளிப்படுகிறது. தாவரங்களுக்கும் நம்மைப் போலவே உயிர் மூச்சு, எண்ணப் பரிமாற்றங்கள், பல்வேறு குணாதிசயங்கள் எல்லாம் உண்டு என்கிற வரிகளைப் படிக்கும்போது நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் தாவரங் களுக்கு உயிர், உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகள் உண்டு என்பதை அறிவியல் பூர்வமாக நிரூபித்த இந்திய விஞ்ஞானி ஜெகதீஷ் சந்திரபோஸ் அவர்கள், தாவரங் களும் சுவாசிக்கின்றன, உணவை உட் கொள்கின்றன, மற்றும் காயமடையும் போது துடிக்கின்றன என்கிறார்.

தாவரங்கள் மனிதர்களைப் போலவே, அன்பு மற்றும் நன்றி உணர்வு கொண்ட தாகவும், வலியை உணரக்கூடிய துடிப்பு உணர்வுடன், ஆபத்துகள் வரும் போது எதிர்வினை ஆற்றக் கூடியதாகவும், மனிதர் களின் எண்ணங்களைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவும் உள்ளன என்கிற ஆராய்ச்சி முடிவுகள் உயிரியல் நிபுணர்களின் வழியாக நமக்கு வியப்பைத் தந்தாலும், தினந்தோறும் இசையைக் கேட்டு வளரும் ஒரு செடியானது, இசையை ரசிப்பதாகவும்

தனது வளர்ச்சியின் ஆற்றலை அபரிமிதமாக வெளிப்படுத்துவதாகவும், விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இத்தகைய குணங்களைக் கொண்ட தாவரங்களின் இலைகள் தன்னிச்சையாகச் செயல்படக் கூடியதாகவும், அவைகளுக்கு ஈரம் தேவைப்படும் பொழுது தாவரங்களின் வேர்கள் நமது வீட்டின் சுவர்களைத் துளைத்து பூமிக்கு அடியில் உள் நுழைந்து விடுவதையும் நாம் கண்கூடாகப் பார்த்திருப்போம்.

இயற்கையின் விதியின் படி மரங்களின் பங்களிப்பாக, வேர்களின் வழியாக நிலத்தடியின் ஈரத்தை இலைகளுக்குக் கடத்தி அங்கே ஆவியாகி, வான் மேகங்களில் மழையாகி மீண்டும் நீர் நிலத்திற்கு வருகிறது. அவை அனைத்திலுமே பஞ்ச பூத தத்துவ விதிகளின் படி இவை பருவ கால நிலைக்கு ஏற்ப மிகச் சரியாக காலத்திகிரியில் சுற்றிக் கொண்டிருக்கின்றன.

ஆய்வாளர்கள் தரும் இந்த உண்மைகள் நமக்கு அதிசயத்தைத் தந்தாலும் இனி தாவரங்களைப் பார்க்கும் கண்ணோட்டம் நம் மனதில் புதியதாக இருக்கும் என்பது மட்டுமின்றி நாம் உயிர் வாழ அவை மிக முக்கிய பங்காற்றுகிறது என்று சொன்னால் உங்களால் நம்பமுடிகிறதா? வாருங்கள் தொடர்ந்து வாசிப்போம்..

பூமிப்பந்தில் பச்சை பசேலென கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் இப்பசுமையான தாவரங்கள் இல்லாமல் போனால், உணவு மட்டுமின்றி நாம் சுவாசிக்கும் மூச்சுக் காற்றே இல்லாமல் உயிர் வாழ்வு ஸ்தம்பித்து விடும் என்பதே நிதர்சனமான உண்மை. உலகில் காணப்படும் ஒவ்வொரு செடியின் இலையிலும் லட்சக் கணக்கான சிறிய துவாரங்கள் மூலம், தாவரங்கள் தங்களின் உணவைச் சூரிய ஒளியிலிருந்து தயாரிப்பதன் மூலம், கார்பன் டை ஆக்சைடை வாங்கிக் கொண்டு, நமக்குத் தேவையான பிராண வாயுவான ஆக்சிஜனை தருகின்றன. இந்த உயிரியல் சுழற்சியே காலத்திகிரியில் இன்றும் நாம் உயிர் வாழ்வதற்கு அடிநாதமாக உள்ளது.

மனிதர்களுக்கும், தாவரங்களுக்கும் இடை யிலிருந்த உயிர் பந்தமே ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்களிடம் மரங்களைத் தெய்வமாக வணங்கும் முறை அக்காலந் தொட்டு, இன்றுவரையிலும் இருந்துள்ளது. பழங்குடி மக்களின் மூல தெய்வமாக ஆதியிலிருந்த மரத்தை வணங்கும் முறையானது, இன்றும் சில இடங்களில் வழிவழியாகக் கடத்தப்பட்டு அவற்றிற்கு உயிர் உள்ளது என நம்பப்படுகிறது.

இயற்கையில் நடைபெறப் போகும் மாற்றங்களை உணரக்கூடிய சூட்சும உணர்வானது எல்லா உயிர்களுக்கும், இயற்கையின் அமைப்பிலேயே உள்ளது என்று அறிவியல் உலகம் இன்று கூறினாலும், அதற்கு முன்பே நம் முன்னோர்கள் இயற்கையோடு இயைந்த ஒரு வாழ்வை வாழ்ந்துள்ளனர் என்பதை நாம் உணரும் விதமாக நமது சங்க இலக்கிய பாடல் வரிகள் முழுவதுமே உயிர் நேயம் பரந்து கிடத்தலை நம்மால் அறிய முடிகிறது.

இலக்கியம் என்பது வெறும் எழுத்துக்கள் அல்ல அது மனித வாழ்வின் அனுபவங்களையும், உணர்வுகளையும், சிந்தனைகளையும் பிரதிபலிக்கும் ஒரு காலத்தின் கருவியாக நம்மிடையே அவை பரிணமிக்கின்றன. ஒரு தனி மனிதனின் ஆழத்தையும், வாழ்வையும் சமூகத்தின் பிரதிபலிப்பையும் எக்காலகட்டத்திலும் வழிமொழிந்து சொல்லக் கூடியதாக இலக்கியம் உள்ளது. அப்படிப்பட்ட இலக்கியத்தில் மட்டுமல்ல, வாழும் வாழ்வியலிலும் அன்பு என்பது என்ன? இந்த கேள்விக்குப் பதிலைத் தேடி உள்ளே நுழைந்தால் "காலத்திகிரி" எதனை விடையாகத் தர நமக்குக் காத்து இருக்கிறது என்பதை அறியத் தொடர்ந்து இதனுடன் பயணியுங்கள். மீண்டும் சந்திக்கலாம்.

# என்றும் கைகொடுக்கும் உறவு

## தர்ஹா நகர் - றம்ஸியா ஹம்ஸா

'மைமூன் ஆஹ். இஹ் ஹஹ். ஆஹ் மைமூன்

'ஆ்ஂ ஓஂ வாரன் வாரன் என்ன இருமல். கூடிட்டுதா

'ஓஂ. ஹ் ஹாஹ் ஹாஹ் மைமூன்

என்னால ஒங்களுக்கும் ஒரே கரச்சல் தான் மைமூன் இஹ். ஹாஆ'

'இந்தாங்க சுடுதண்ணியக் குடிங்க'

' இஹ் ஹா ஹ்ஹா ம் என்னால ஒங்கட தூக்கமும் கலஞ்சீட்ட எனா '

'வெளிய ஒரத்த மழையாயீக்குது. அதுதான் ஒங்கட இருமல் கூடிட்ட தெறமாகப் போத்தியுட்றன் படுங்கோ'

'சரி மைமூனா நீங்களும் படுங்கோ '

ஆஸ்துமா நோயாளியான தன் கணவனைக் கனத்த கம்பளிப் போர்வையால் போர்த்தி விட்டு மைமூனாவும் தூங்கச் சென்றாள்.

மைமூனாவுக்கோ தூக்கம் தூரமாகி நெடும் நாளாகிவிட்டது. அவள் கண்களை மூடினாலும் நெஞ்சை விட்டகலாத கடந்த கால சில கசப்பான கனத்த நினைவுகள் இன்று பசுமையான நினைவுகளாய் கண்களுக்குள் வலம் வரலாயின.

ஆம்! ஸியாத்-மைமூனா தம்பதிகளுக்கு மூன்று ஆண்களும் பெண்ணொன்றும் என மொத்தம் நான்கு பிள்ளைகள். வறுமையிலும் அவர்களின் வாழ்வு செழுமையாகவே கழிந்தது. எந்த நேரமும் வீடு கலகலவென்றே இருந்தது.

ஸியாத் ஒரு ஆஸ்துமா நோயாளி. என்றாலும், வறுமை அவரை வாட்ட வயிற்றுப் பசிக்காக என்னவாவது செய்ய வேண்டும் என்பதற்காக வீடுகளுக்கு பெய்ன்ட் அடிக்கும் வேலை செய்யும் ஒருவருக்கு உதவியாளராகப் போகிறார். மாரிகாலம் ஆனால் ஸியாத்துக்கு வேலையில்லை. அவரால் வேலை செய்யவும் முடியாது. அப்போதெல்லாம் மூன்று நேர சாப்பாடும் ஒரு நேரமாகச் சுருங்கிவிடும். சில நாட்களில் ஒரு வேளை சாப்பாட்டுக்கும் கூட அவர்கள் திண்டாடுவார்கள். ஆனால் மைமூனா சாப்பாடு இல்லாவிட்டாலும் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பத் தவறுவதில்லை.

ஒரு நாள் மூத்த மகன் சியாம் பசியின் கொடுமை தாளாமல் பாடசாலை செல்ல மறுத்து விட்டான். இதனை அவதானித்த சின்ன மகன் நளீமும் 'உம்மா உம்மா நாநா ஸ்கூல் போகாட்டி நானும் போகமாட்டன்' என அடம் பிடித்தான்.

'இல்ல மகன், நாநாக்கு வயித்த... நோவாம். அதுதான் மகன் நாநா இன்டைக்கு ஸ்கூல் போகமாட்டார்....'

'உம்மா எனக்கும் தானும்மா பசியும் வயித்த நோவும். எனக்கும் இன்டைக்கு

ஸ்கூலுக்குப் போகேலாதும்மா. நானும் இன்டைக்கு ஸ்கூலுக்குப் போகமாட்டன் உம்மா எனக்குப் பசி. எனக்கேலாது உம்மா.. இங்... ங்... இங்...' என அழுது... அடம் பிடித்து அன்று பாட சாலைக்குக் கட் அடித்தான்.

ஸியாதுக்கு மழை காலத்தில் வேலை இல்லையென்றாலும், பசிக்கு மழை வெயில் என விளங்காதே. அடங்கியிருந்த பசியும் கூட வேளா வேளைக்கு வயிற்றைக் கிள்ளிக் கொண்டு வெளியே தலைகாட்டி விடும் அல்லவா.

நிரந்தரத் தொழில் இல்லாத, நோயாளி யான கணவன். பசியுடன் பாடசாலைக்குப் போக மாட்டேன் என அடம் பிடிக்கும் பிள்ளைகள். பட்டினியென்றாலும் பிள்ளை களுக்குப் படிப்பைக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையில் வாழும் மைமூனா சிந்தித்தாள். பிள்ளைகளின் பசியை போக்க என்ன செய்யலாம் என வழி ஒன்றைத் தேடினாள்.

மைமூனாவுக்கு அல்லாஹ் ஒரு உதிப்பைக் கொடுத்தான். அதுதான் குடிசைத் தொழிலான இடியப்ப வியாபாரம். 'இம்..ம்....இடியப்பம் சுட்டு கடைகளுக்குக் கொடுத்தா ஏதாவது கிடைக்குமே ' என முடிவுக்கு வந்தாள். தனது யோசனையை கணவனிடமும் சமர்ப்பித்தாள்.



'ஆம்ஃ, மைமூன் நானும் ஒரு நோயாளி. என்னாலும் ஒழுங்காக ஒரு வேலையும் செய்யேலாமல் இருக்கிறன். இது நல்ல யோசன மைமூன்! நானும் ஒங்களோட சேர்ந்து ஒங்களுக்கு உதவியாக இடியப்பம் ஊத்தித்தாறன்

'ம்ம் இன்னும் கொஞ்ச நாளைக்கித் தானே எங்கட எல்லாக் கஷ்டங்களும் மூத்தவன் சியாமுக்கு இன்னும் கொஞ்ச நாளைல ஜொப்பொன்று கெடச்சிடுமாம்.'

'ஓம்ஃ மைமூன் நாங்க கஷ்டப்பட்றது அதுகளுக்காகத் தான் என்றது அதுகளுக்கும் வெளங்குது தானே! அதால எங்கட புள்ளகள் எங்கள ஒருநாளும் கைவிடாதுகள்....'

ஆம்! அன்று முதல் மைமூன் தன் பிள்ளைகளுக்காக, அவர்கள் படித்து சமூகத்தில் நல்ல நிலைமைக்கு வர வேண்டும் என்பதற்காக, விடியற்காலை மூன்று மணிக்கே நித்திரையை விட்டெழ ஆரம்பித்தாள். இப்போதெல்லாம் அவர்களின் அடுப்பு மூவேளையும் எரிந்ததுடன் எல்லோரது வயிறும் நிரம்பியது. பிள்ளைகளும் எந்த மறுப்பும் இன்றி பாடசாலைக்கும் சென்றனர்.

பிள்ளைகள் வெளிநாடுகளுக்குப் போகவென்று ஆயத்தமாகும் போதே, ஒரு நாள் எல்லாப் பிள்ளைகளையும் வைத்து மைமூனா, 'நீங்கள் எந்த நாட்டில் எந்த வேலையில் இருந்தாலும் பரவாயில்லை, நானோ வாப்பாவோ மௌத்து என்ற செய்தி கிடைத்தவுடன் எங்கட மையித்துக்கு வரக்கூடிய வழியப் பார்த்துக் கொள்ளுங்கோ. இப்போவெல்லாம் முந்தி மாதிரியெல்லாம் இல்லையாமே! ஒன்லைன் என்றும் இன்டநெட் என்றும் என்னென்னவோ எல்லாம் இருக்குதாமே! என்னவோ அவசரமாக டிககட்டெல்லாம் புக் பண்ணவும் ஏலும் என்டும் எல்லாரும் சொல்லுவாங்களே' எனத் திக்கித் திணறி ஏதோ மைமூனாவுக்குத் தெரிந்ததை பிள்ளைகளுக்குச் சொல்லி வைத்தாள்.

அப்போ பிள்ளைகள் 'உம்மாவும் எல்லாம் தெரிஞ்சி வைத்திருக்காவே என்று சிரித்து சமாளித்தவர்கள்,

'உம்மா. அப்படி எல்லாருமே ஒரேயடியாகப் ஒங்களையும் வாப்பாவையும் தனியாக உட்டுப் போட்டுப் போக மாட்டோம் உம்மா... அப்படிப் போறதென்டாலும் நாநா வெகேஷன் வரும் போது நான், நான் போகும் போது தம்பி வருவான். அந்த மாதிரியாக ஏதாவது ஏற்பாடு செய்யத்தான் மசூரா பண்ணிக் கொண்டிருக்கிறோம் உம்மா. டோன்ட் வொறி...' என்று மகள் சைமா தன் தாயைக்கட்டிப் பிடித்துத் தாயின் மன நிலை அறிந்து அதற்கேற்றாற் போல் வார்த்தைகளால் வர்ணம் பூசினாள்.

நான்கு பிள்ளைகளும் தமது உயர் கல்வியை முடித்து உயர் பதவிகளில் அமர்ந்து கைநிறைய ஊதியம் பெற ஆரம்பித்தார்கள். குடிசை வீடு இருந்த இடம் மாளிகையாக மாறியது. அன்று ஒரு நேர மருந்துக்குக் கூட உதவாத சொந்தங்கள், உறவு என்று சொல்லிக் கொள்ளக்கூட வெட்கப்பட்ட இரத்த உறவுகள், இன்று எங்கள் சொந்தங்கள் என வாய் கூசாமல் கூறிக் கொண்டு உறவாட வருகிறார்கள்.

பிள்ளைகள் நான்கு பேரும் ஒருவர் பின் ஒருவராக மணம் முடித்தார்கள். வெளிநாடுகளில் குடியேறியும் விட்டார்கள்.

பிள்ளைகள் விமான நிலையம் செல்லும் வரை 'உம்மா நான்...போய் உங்க ரெண்டு பேரையும் அவசரமாக என்கிட்ட எடுத்துடுவேன். நீங்களும் வாப்பாவும் பாஸ்போட் எடுக்கிற வேலைகளப் பாருங்கோ உம்மா.. கவலப் படாதீங்கம்மா. துஆ செய்ங்கம்மா....'

என்று ஆரத்தழுவி தாயின் கண்ணீரைத் துடைத்து விட்டுச் செல்வார்கள்.

'ஆஃ. இன்ஷா அல்லாஹ்... பார்ப்பம்..' என்பாள் ஏனோதானோவென்று. நாளை இதுதான் நடக்கும் என்பதைத் தெரிந் திருந்தவள் போல்.

'உம்மா.... எங்களுக்காக நீங்கள் எவ்வளவு கஷ்டப்பட்றீங்க...நான் படித்து பெரியாளான பொறகு ஒங்கள ஒரு ராணி மாதிரி வெப்பன். உம்மா.. ஒங்களையும் வாப்பாவையும் என் பக்கத்திலேயே வெச்சிப் பார்ப்பேன் உம்மா...' என்றான் மூத்தவன் சியாம்.

இரண்டாமவன் நளீம் 'உம்மா. நான் எப்பவும் ஒங்க கூடவே இருப்பேன். நீங்க ரெண்டு பேரும் என் கூடவேதான் இருக்கோணும்' என்றான்.

மகள் சைமாவோ சற்று மேலதிக மாகவே 'உம்மா நான் என்டா. ஒங்கள கிச்சனுக்கு வரவுடவே. மாட்டேன். நானே தான் எல்லாருக்கும் சோறு கறி எல்லாம் ஆக்கித் தருவன். ஒங்ளுக்கு உதவிக்கு ஸேர்வன்ட் ஒன்று எடுப்பன். நீங்க ரெஸ்டாக ஈக்கிறதுதான் ஒங்கட வேல...'என்றாள்.

நான்காவது மகன் 'உம்மா. நான் தான் வாப்பாவ மருந்துக்கு என்ட கார்ல கூட்டிக் கொண்டு போவன்' என்றான்.

வறுமையில் வாடிய காலம் நான்கு பிள்ளைகளும் குடிசை வீட்டில், தாயின் பக்கத்தில், நிலத்தில் அமர்ந்து கொண்டு சொன்னவைகள் தான் இவைகள். காலங்கள் மாற காட்சிகளும் மாறுவது இயற்கைதானே! அன்று அவர்களின் பிஞ்சு மனங்களில் துளிர்த்த, மனதில் பதிந்த பசுமை நினைவுகளை இன்று மைமூனினால் மீட்டிப் பார்க்க மட்டுமே முடிந்தது.

'அன்று இப்படியெல்லாம் கூறிய நான்கு பிள்ளைகளிலும், எங்களது வயதான காலத்தில் ஒரு பிள்ளை கூட பக்கத்தில் இல்லையே! பேரப் பிள்ளைகளுடன் கொஞ்ச வேண்டிய வயதில் தனிமையில் வாடுகிறோமே'. என நினைக்க மைமூனாவின் குரல்வளையை யாரோ நசுக்குவது போல் உணர்ந்தாள். அவளையறியாமலேயே கண்ணீர் அருவி யாய் வந்து அவள் முகத்தில் கொட்ட அவள் நனவுலகுக்கு வந்தாள்.

இப்போவெல்லாம் மைமூனாவின் வீடு உறவினர்களால் நிறைந்து வழிகிறது. வெளிநாட்டு நாணயம் போலவே, நலன் விசாரிப்புகளுக்கும், உணவுப் பரிமாற்றங்களுக்கும் அவர்களின் வீட்டில் பஞ்சம் இருக்கவில்லை.

மைமூனாவுக்கும் ஸியாதுக்கும் அவர் களின் பிள்ளைகள் நால்வரும் எந்தக் குறைவும் வைக்கவில்லை. அருகில் இல்லாமையைத் தவிர.

'மைமூன் ஹஹ் ஹஹ் மைமூன் ஹாஹ் ஹஹ் நீங்க .தூக்கமா '

'ஆஃ. இன்னுமில்ல ஏன். என்ன '

'இல்ல மைமூன் மகள்...

'ம் ஓஃ அவங்களுக்கு நேரமில்லையே. புள்ளகளுக்கு ஸ்கூல் தொடங்கிட்டாம்.'

'அப்படியாமா...ஓஃ மைமூன் எங்க நாட்டுக்கும் வெளிநாட்டுக்கும் நேர வித்தியாசமும் ஈக்குதே அப்படி யென்டா சியாம் எப்ப வாரதாம் '

'சியாம் பேசி ஒரு கெழமையாச்சி. ஒபீஸ்ல இப்பவே லீவ் எடுக்க ஏலாதாம் லீவ் கெடச்ச பொறவு வரப்பார்க்கிறாம்.'

'ம்.இம் அப்பிடியாமா. மை. மூன்.

எங்கயென்டாலும் புள்ளகள் நல்லா ஈக்கட்டும் நாங்க துஆ செய்வம் இஹ் ஹஹ். ஹாஹ். '

'நாளைக்கு டொக்டர்ட செனலிங் இருக்கு. அதுக்கு முதல் வெள்ளனையோட போய் இரத்தப் பரிசோதனைக்காக இரத்தம் கொடுக்கணும். அந்திக்கு அதுட ரிப்போட்ஸ் எல்லாம் எடுத்துக் கொண்டு டொக்டர்ட போகணும்......'

'இம் ம். எல்லாத்தையும் நீங்க ஒருத்தர் தானே மைமூன் ஓடியாடி செய்யணும். அன்டையிலிருந்து இன்டுவரைக்கும் ஒங்களுக்கு ஓய்வென்றதே இல்லையே.' என்று தன் மனைவி படும் பாட்டை வாயாரப் புகழ்ந்து அவரது கவலையை வெளிப்படுத்தினார்.

'இம் அதுதான் வாழ்க்க என்றது. கவல சந்தோசம், வசதி வறும என எல்லாமே மாறி மாறி வரும். ஒன்றுமேயில்லாத காலம் சந்தோசமாக இருந்தோம். இன்று எல்லாமே இருக்குது. ஆனாலும் ஒன்றுமேயில்லாதது போல என்னவோ வெறுமையை உணர்கிறோம். இதெல்லாமே அல்லாஹ்வின் ஏற்பாடு. நாங்க பொருந்திக் கொள்வோம்.'

ஸியாத் மௌனமானார். ஆனால் தனக்குள்ளே தன் மனைவியைப் பற்றி யோசிக்கலானார்.

'நாளைக்கு என் நெலமையப் பார்த்துட்டு டொக்டர் என்ன சொல்லப் போறாறோ. எனக்கீக்கிற வருத்ததுக்கு என்ன ஹொஸ்பிட்டல்ல எட்மிட் பண்ணிடுவாங்களோ என்றும் தெரியா. எனக்கு என்ன சரியும் நடந்தால் மைமூனின் கதி...' என்று தனக்குள்ளே தன் மனைவி மைமூனைப் பற்றி யோசித்தவர், தன் கண்களில் வடிந்த கண்ணீரை மனைவி கண்டுவிட முன் மெதுவாய்த் தன் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார்.

(முற்றும்)

---

# மூச்சினில் தமிழே

விளம்... விளம்... விளம்
விளம்... விளம்... விளம்

தனித்தமிழ் மூச்சினில் தெறித்திட
தரணியில் தன்னிலை உயர்ந்திடும்
நனிச்சுவை சொற்களைப் பேசிட
நாக்கினில் நறுமணம் வீசிடும்
கனிந்திடும் புலமையில் வழிந்திடும்
கவின்மொழிக் கருத்துகள்தளிர்த்திடும்
இனித்திடும் செந்தமிழ் இலக்கணம்
ஈன்றிடும் கவிதைகள் மிளிர்ந்திடும்

***தமிழ்மாமணி கவி நிலா மோகன்***
தஞ்சாவூர், தமிழ்நாடு மாநிலம், இந்தியா.

# நிமிரும் சுடர் நீ

யாரும் செதுக்காத சுயம்பு.
உன் பிம்பத்தை எதனோடும் ஒப்பிட்டு
நீ சிறுமைப்படுத்திக் கொண்டதே இல்லை.
வீழ்த்த நினைத்தவர்கள் முன்னே
நீ புலம்பல்களைக் கொடுக்கவில்லை;
உடைந்த இடங்களிலிருந்தே
உன்னை நீயே மீண்டும் செதுக்கத் தொடங்கினாய்.
உன் உழைப்பின் ஒவ்வொரு துளி வியர்வையும்
நீ சூடிக்கொண்ட வைரக் கிரீடம்.
போர்க்களங்கள் உன்னை மண்டியிடச் சொன்னபோது
உன் முதுகெலும்பை இன்னும் நிமிர்த்தி
உன்னை நீயே சுமந்து நடந்தாய்.
கண்ணீர் ரகசியமானது
உலகிற்கு உன் சிரிப்பின் சத்தம் மட்டுமே கேட்டது
யார் முன்னும் அழுதுவிடக் கூடாதென்ற
உன் பேராணவமான வைராக்கியம் தான்
உன்னை இன்று பேரழகாய் மாற்றியிருக்கிறது.
அன்பு செய்தாய்
நேசித்தவர்கள் விலகிச் சென்றபோது
துரத்திச் சென்று கெஞ்சவில்லை;
நிமிர்ந்த பார்வையோடு அதைத் தாங்கிக் கொண்டாய்.
பூமி முழுதும் அன்பின் வாசத்தைத் தூவி
மற்றவர் மகிழ்ச்சியில் மலரும் உன் மனிதம் –
நிச்சயமாக,
நீ ஒரு அதிசயம்.
வாழ்வை அதன் போக்கில்
எதிர்கொள்ளும் நீ...
ஒரு முடிவில்லாத பேரழகு!




திருமதி.றொசில்டா அன்டனி.
இத்தாலியிலிருந்து

9 786249 425606





## ஆழ்ந்த இரங்கற்பா......

.

எப்போது நீவாம் இலங்கைக்கு வந்தாலும்
முப்போதும் நட்பு முனைக்கின்ற - செப்புக்
கலவாத தங்கம்என் கண்விட்டுப் போச்சே
நிலவாக சொர்கத்தில் நின்று.

.

முள்ளில்லா ரோஜாவாய் முன்னே மலர்ந்தவுனைத்
துள்ளுந்(து) எமனாகித் தூக்கிப்போய்க் - கொள்ளையிட
நெஞ்சம் கனக்க நிலையே தடுமாற
அஞ்சல் செலுத்துகிறேன் ஆம்.

.

என்றும் இளைஞர்கள் ஏற்பீர்  அறிவுரையை
மன்றாடும் எந்தன் மனவுரையை - சென்றுவிட்ட
நேருள்ளச் சோதரர்க்கு நேர்ந்ததைப்போல் ஆகாமல்
யாரும் இருக்காதீர் இங்கு.

.

துள்ளுந்தின் வேகம் துயரத்தில் தான்முடியும்
பள்ளமும் மேடுமுனைப் பாழாக்கித் - தள்ளிவிடும்
வீணாகச் சென்று விபத்துக்குள் ஆகாமற்
தேனாக வாழ்வீர் திளைத்து.

.

**தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு